# வுழூ செய்யும் முறை

## (ஷாஃபிஈ)



வெளியீடு: அல் மதீனதுல் இல்மிய்யா

(துஃவதே இஸ்லாமி)

Islamic Research Center

இந்த சிறுநூல் ஷேகே தரீகத், அமீரே அஹ்லுஸ் சுன்னத், ஹழ்ரத், அல்லாமா, மௌலானா அபூபிலால் முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரழவி دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَة அவர்களின் "வுழூ செய்யும் முறை" எனும் சிறுநூலின் ஃபிக்ஹ் சட்டங்கள் ஷாஃபிஈ ஃபிக்ஹ்வின் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளதோடு, தேவைக்கேற்ப மாற்றங்களுடன் தொகுக்கப்பட்டுள்ளன...

# முதலில் இதை வாசித்துக் கொள்ளுங்கள்

اَلْحَمْدُ لِلّٰه நாயகத்தின் ஆகீன்களுடைய மார்க்க அமைப்பான தஃவதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஷேகே தரீகத், அமீரெ அஹ்லுஸ் சுன்னத், ஹழ்ரத், அல்லாமா, மௌலானா அபூ பிலால் முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரzஸவி, ஸிZயாயி دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَة அவர்களின் நூல்களிலும், ரிஸாலாக்களிலும் மார்க்கக் கோட்பாடுகள் மற்றும் அமல்கள், நற்பண்பு மற்றும் நல்லொழுக்கங்கள், ஷரீஅத் மற்றும் தரீகத், சரித்திரம் மற்றும் வாழ்க்கை வரலாறு, அறிவியல் மற்றும் மருத்துவம், நற்குணம் மற்றும் கௌரவம், அன்றாட விவகாரங்கள் மற்றும் பல தலைப்புகளில் கல்வி மற்றும் ஞானத்தின் மிகவும் மதிப்புமிக்க பொக்கிஷங்கள் உள்ளன. அதற்காக "அல் மதீனதுல் இல்மிய்யா" வுடைய (இஸ்லாமிய ஆராய்ச்சி மையம்) "ஷாஃபிஈ ஃபிக்ஹ் நூல்கள்" எனும் துறை உங்களுக்கு தேவையான நூல்கள் மற்றும் ரிஸாலாக்களை மேலும் செம்மைபடுத்தி இன்னும் அதிகரித்து ஷாஃபிஈ ஃபிக்ஹ் பிரகாரம் தொகுத்து வருகிறது. இதனால் ஷாஃபிஈ ஃபிக்ஹ்வைப் பின்பற்றுபவர்கள், அமீரெ அஹ்லுஸ் சுன்னத் دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَة அவர்களின் கல்வி மற்றும் ஞானம் பொதிந்த மதனி மலர்களிலிருந்தும் பிரயோஜனம் பெறலாம். "ஷாஃபிஈ ஃபிக்ஹ் நூல்கள்" துறையின் இந்த ரிஸாலாக்களின் மீது மேற்கொள்ளப்படும் விவரங்கள் பின்வருமாறு:

❈ ரிஸாலாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஃபிக்ஹ்வின் மஸ்அலாக்களும் மாற்றப்பட்டு ஷாஃபிஈ ஃபிக்ஹ்வின் அதிகாரப்பூர்வ நூல்களிலிருந்து எழுதப்பட்டுள்ளன.

❈ தேவைக்கேற்ப சிற்சில இடங்களில் மஸ்அலாக்கள் அதிகமாக சேர்க்கப் பட்டுள்ளன.

❈ தஃவதே இஸ்லாமியின் இஸ்லாமிய ஆராய்ச்சி மையம் மற்றும் ஷாஃபிஈ ஃபிக்ஹ் நூல்களின் துறை புதுப்பிக்கப்பட்ட கொள்கைகளை கருத்தில் கொண்டு ரிஸாலாக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

❈ மேற்கூறிய பணி முடிந்ததும், ரிஸாலா முழுவதும் முஃப்தி முஹம்மத் ரஃபீ ஸஃதீ ஷாஃபிஈ مَدَّظِلُّهُ العَالِی அவர்களால் ஆய்வு செய்யப்பட்டன.

இந்த ரிஸாலாவில் உள்ள அனைத்து விதமான நேர்த்தியும் சிறப்புகளும் நிச்சயமாக தூய அல்லாஹ் வழங்கிய திறனாலும், அவனது பிரியமான காருண்ய நபி صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் நல்கையாலும், இறைநேசர்கள் رَحِمَهُمُ الله தயவு கூர்ந்ததாலும், இன்னும் அமீரெ அஹ்லெ சுன்னத் دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَة அவர்களின் அன்பான சீராட்டுதலாலும் மேலும் அவர்களுடைய நேர்மையான துஆக்களாலும் உண்டான விளைவாகும், இன்னும் குறைபாடுகள் இருப்பின் நம்முடைய தற்செயலான பற்றாக்குறையால் நேர்ந்ததாகும்.

அல் மதீனத்துல் இல்மிய்யா (இஸ்லாமிய ஆராய்ச்சி மையம்)
ஷாஃபிஈ ஃபிக்ஹ் நூல்கள் துறை

21 ஜமாதில் ஆகிர் ஹிஜ்ரி 1442 / 4 பிப்ரவரி 2020


www.dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# வுழு செய்யும் முறை (ஷாஃபிஈ)

இந்த ரிஸாலாவை தொடக்கத்தில் இருந்து இறுதி வரை வாசியுங்கள், உங்களுடைய பல தவறுகள் உங்களுக்கு தெரிவதற்கு வலுவான வாய்ப்புள்ளது.

## ஸலவாத்தின் சிறப்புகள்

ஈருலக நாயகம் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் மகிமையான கூற்றாக இருக்கிறது: "வாஞ்சை மற்றும் அன்பின் காரணமாக, பகல் மற்றும் இரவுகளில் என் மீது, மூன்று மூன்று முறை ஸலவாத் ஓதியவருக்கு அந்த இரவிலும் அந்த நாளிலும் அவர் செய்த பாவங்களை மன்னித்து விடுவது அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது." [1]

صَلُّوْا عَلَى الْحَبِيْب ! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلَّم

## உஸ்மான் ஙனி அவர்களின் இஷ்கெ ரஸூல்

ஹழ்ரத் ஸய்யிதுனா உஸ்மான் ஙனி رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் ஒரு முறை ஒரு இடத்திற்கு சென்றடைந்த போது தண்ணீர் வரவழைத்து வுழு செய்தார்கள். பிறகு திடீரென புன்முறுவல் பூத்தார்கள், இன்னும் அன்பின் பூரிப்பால் கூறத் தொடங்கினார்கள்: "நான் ஏன் புன்முறுவலித்தேன் என்று தெரியுமா?" பிறகு அந்த கேள்விக்கு தானே பதில்கூற தொடங்கினார்கள்: "ஒரு முறை மதீனாவின் மாமன்னர் நாயகம் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் இதே இடத்தில் வுழு செய்தார்கள், முடித்த பிறகு புன்முறுவலித்தார்கள். இன்னும் ஸஹாபா பெருமக்களை رَضِيَ اللهُ عَنْهُم நோக்கி கூறினார்கள்: "நான் ஏன் புன்முறுவலித்தேன் என்று தெரியுமா?" ஸஹாபா பெருமக்கள் رَضِيَ اللهُ عَنْهُم கூறினார்கள்: "அல்லாஹ் عَزَّوَجَلَّ மற்றும் அவனுடைய ரஸூல் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் தான் நன்கு அறிவார்கள்." பிறகு இனிமையிலும் இனிய எம்பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் தாமாகவே கூறினார்கள், "ஒருவர் வுழு செய்யும் போது முகம் கழுவுவதினால் முகத்தின், கைகளை கழுவுவதினால் கைகளின், தலையை மஸ்ஹு செய்வதினால் தலையின், இன்னும் கால்கள் கழுவுவதினால் கால்களின் பாவங்கள் உதிர்ந்து விடுகின்றன. [2]

வுழு செய்து மகிழ்ந்தார் அரசர் உஸ்மான்!
பகர்ந்தார்: புன்முறுவலித்தேன், ஏன் தெரியுமா!
பின்பு கேட்டவரே பதிலளித்தார் கேட்போருக்கு!
ஒருவருடைய பாவனையை நானும் பாவனை செய்கிறேன்!

صَلُّوْا عَلَى الْحَبِيْب ! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلَّم



www.dawateislami.net

ஸஹாபா பெருமக்களின் நேசர்களே! பார்த்தீர்களா! நன்மை பயக்கும் நாயகம் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் ஒவ்வொரு பாவனையையும் இன்னும் ஒவ்வொரு சுன்னத்தையும் தனதாக்கி கடைப்பிடிப்பதில் ஸஹாபா பெருமக்கள் رَضِيَ اللّٰهُ عَنْهُم பித்தர்களாக இருந்தார்கள். மேலும், இந்த ரிவாயத்தின் மூலம் பாவங்களை கழுவுவதற்கான செய்முறைக் குறிப்பும் தெரிய வந்தது. اَلْحَمْدُ لِلّٰه வாயைக் கொப்பளிப்பதன் மூலம் வாயுடையதும், மூக்கில் தண்ணீர் விட்டு கழுவுவதன் மூலம் மூக்குடையதும், முகத்தை கழுவுவதன் மூலம் கண் இமைகள் உட்பட முழு முகத்துடையதும், கைகளை கழுவுவதன் மூலம் கைகளுடையதும், நகங்களுக்கு அடியில் உள்ளதும், தலையை (மற்றும் காதுகளை) மஸ்ஹூ செய்வதினால் தலையுடையதும் இன்னும் அதோடு சேர்த்து காதுகளுடையதும், கால்களைக் கழுவுவதன் மூலம் கால்களுடையதும் இன்னும் அதோடு சேர்த்து கால் நகங்களுக்கு அடியில் உள்ளதுமான அனைத்து பாவங்களும், உதிர்ந்து விடுகின்றன.

## பாவங்கள் உதிர்ந்துவிட்ட சம்பவம்

اَلْحَمْدُ لِلّٰه வுழு செய்பவரின் பாவங்கள் உதிர்ந்துவிடுகின்றன, இது சம்பந்தமாக, ஹழ்ரத் அல்லாமா அப்துல் வஹ்ஹாப் ஷஃரானி رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்கள் ஈமானைத் தூண்டும் ஒரு சம்பவத்தை விவரிக்கிறார்கள்: ஒரு சந்தர்ப்பத்தில், இமாமுல் அஃலம் அபூ ஹனீஃபா رَضِيَ اللّٰهُ عَنْهُ அவர்கள், கூஃபாவின் ஜாமிஃ மஸ்ஜிதின் வுழு செய்யும் அறைக்குள் சென்றபோது, அங்கு ஒரு இளைஞன் வுழு செய்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவனிடமிருந்து வுழுவின் (பயன்படுத்தப்பட்ட தண்ணீரின்) சொட்டுகள் சொட்டிக் கொண்டு இருந்தன. அவர்கள் رَضِيَ اللّٰهُ عَنْهُ கூறினார்கள்: "மகனே, உனது பெற்றோரின் கீழ்ப்படியாமைக்கு மனந்திருந்தி தௌபா செய்துக்கொள்." அவன் உடனே "நான் தௌபா செய்துக் கொண்டேன்" என்று பதிலளித்தான். இன்னும் ஒரு நபருடைய வுழுவின் (பயன் படுத்தப்பட்ட தண்ணீரின்) சொட்டுகள் சொட்டிக் கொண்டு இருந்தன. அவர்கள் رَضِيَ اللّٰهُ عَنْهُ அந்த நபரிடம் கூறினார்கள்: "என் சகோதரரே! நீர் விபச்சாரத்தில் இருந்தும் மனந்திருந்தி தௌபா செய்துக்கொள்ளுங்கள்." அவர், "நான் தௌபா செய்துக் கொண்டேன்" என்று பதிலளித்தார். வேறொரு நபருக்கும் வுழுவின் சொட்டுகள் சொட்டிக் கொண்டு இருப்பதைக் கண்ட அவர்கள் رَضِيَ اللّٰهُ عَنْهُ அந்த நபரிடமும் கூறினார்கள், "நீர், மது அருந்துதல், இன்னும் பாட்டு தாளம் இசை கேட்பதில் இருந்தும் மனந்திருந்தி தௌபா செய்துக் கொள்ளுங்கள்." அவரும், "நான் தௌபா செய்துக் கொண்டேன்" என்று பதிலளித்தார். இமாமுல் அஃலம் அபூ ஹனீஃபா رَضِيَ اللّٰهُ عَنْهُ அவர்களுக்கு இருந்த ஞான திருஷ்டி காரணமாக, மக்களின் குறைபாடுகள் தெளிவாகத் தெரிந்தன.



www.dawateislami.net

முஸ்தஃபா صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: “என்னை பற்றிய Zஸிக்ர் யாரிடம் செய்யப்பட்டதோ, அவர் என் மீது ஸலவாத் ஓதவில்லை என்றால், அவருடைய மூக்கு மண் தூசி படிந்ததாக இருக்கட்டும்.” (திர்மிதி)

ஆகவே, அவர்கள் رَضِیَ اللّٰهُ عَنْهُ இந்த ஞான திருஷ்டியை அவர்களிடமிருந்து நீக்கி விடும்படியாக இறைவனின் சமூகத்தில் துஆ செய்தார்கள். அல்லாஹ் அவரது துஆவை ஏற்றுக் கொண்டான், அதனால் அவர்களுக்கு رَضِیَ اللّٰهُ عَنْهُ வுழு செய்பவர்களின் பாவங்கள் உதிர்வதைக் காண்பது நின்று விட்டது. [3]

صَلُّوْا عَلَى الْحَبِيْب ! صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلَّم

## உடல் முழுவதும் தூய்மை ஆகிவிட்டது!

இரண்டு ஹதீஸ்களின் விவரமாவது: யார் بِسْمِ اللّٰهِ (பிஸ்மில்லாஹ்) என்று கூறி வுழு செய்கிறாரோ, அவருடைய தலை முதல் கால் வரை உடல் முழுவதும் தூய்மை ஆகிவிட்டது, யார் بِسْمِ اللّٰهِ (பிஸ்மில்லாஹ்) என்று கூறாமல் வுழு செய்கிறாரோ, அவருடைய உடலில் தண்ணீர் எந்த அளவிற்கு பட்டதோ அந்த அளவிற்குத் தான் அவருடைய உடல் தூய்மை அடைந்தது. [4]

ஹழ்ரத் அபூ ஹுரைரா رَضِیَ اللّٰهُ عَنْهُ அவர்களின் ரிவாயத்தாக இருக்கிறது: மதீனத்து மாமன்னர், இதயத்திற்கும் நெஞ்சத்திற்கும் சுகமானவர், நாயகம் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: “அபூ ஹுரைரா! நீர் வுழு செய்யும் போது “بِسْمِ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ” (பிஸ்மில்லாஹி வல் ஹம்துலில்லாஹி) என்று கூறிக்கொள்ளுங்கள். அதனால் எதுவரைக்கும் உங்கள் வுழு நிலைத்திருக்குமோ அதுவரைக்கும் உங்களுடைய மலக்குகள் (அதாவது கிராமன் காதிபீன்) உங்களுக்காக நன்மைகளை எழுதிக் கொண்டே இருப்பார்கள். [5]

## வுழுவோடு உறங்குவதின் சிறப்பு

தூய ஹதீஸில் வருகிறது: வுழுவோடு உறங்குபவன் நோன்பு நோற்று இபாதத் செய்தவனைப் போல் ஆவான். [6]

## வுழுவோடு மரணித்தவர் உயிர்த்தியாகி ஆவார்

மதீனாவின் மணிமகுடம் தரித்தவர் நாயகம் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள், ஹழ்ரத் அனஸ் رَضِیَ اللّٰهُ عَنْهُ அவர்களிடம் கூறினார்கள்: “மகனே! எந்நேரமும் வுழுவோடு இருக்கும் ஆற்றல் உம்மிடம் இருந்தால், அப்படியே செய்வாயாக! ஏனென்றால் மரணத்தின் மலக்கு யாருடைய ரூஹுவை வுழுவோடு இருக்கும் நிலையில் கைப்பற்றுகிறாரோ அவருக்கு ஷஹாதத் (உயிர்த்தியாகம்) எனும் அந்தஸ்து எழுதப்பட்டு விடுகிறது.” [7]

ஃபுகஹா பெருமக்கள் رَحِمَهُمُ اللّٰهُ عَلَيْهِمْ கூறுகிறார்கள்: எப்பொழுதும் வுழுவோடு இருப்பது முஸ்தஹப் அதாவது விரும்பத்தக்கதாகும். [8]

முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: “என் மீது பத்து முறை ஸலவாத் ஓதியவருக்கு, அல்லாஹ் நூறு முறை கருணையோடு அருள்பாலிக்கிறான்.” (துபரானி)

## இடையூறுகளிலிருந்து பாதுகாப்பு பெறும் முறை

பரிசுத்த அல்லாஹ், ஹழ்ரத் மூஸா கலீமுல்லாஹ் عَلَيْهِ الصَّلٰوةُ وَالسَّلَام அவர்களிடம் கூறினான், “மூஸாவே! வுழு இல்லாத நிலையில் இருக்கும் போது உமக்கு ஏதேனும் இடையூறு நேர்ந்தால், உம்மையே நீர் கடிந்துக் கொள்ளும். [9]

## “احمد رضا” – “அஹ்மது ரZஸா” எனும் இந்த உருது வார்த்தைகளின் ஏழு எழுத்துகள் சம்பந்தப்பட்ட எந்நேரமும் வுழுவோடு இருப்பதின் 7 சிறப்புகள்

என்னுடைய எஜமானர் அஃலா ஹழ்ரத் இமாம் அஹ்மத் ரZஸா கான் رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: சில ஆரிஃபீன்கள் رَحْمَةُ اللهِ عَلَيْهِم கூறுகிறார்கள்: எந்நேரமும் வுழுவோடு இருப்பவருக்கு பரிசுத்தமான அல்லாஹ் ஏழு சிறப்புகளுடன் கௌரவிக்கிறான்:

﴾1﴿ மலக்குகள் அவருடன் இருக்க விரும்புகிறார்கள்.

﴾2﴿ ‘கலம்’ எனும் எழுதுகோல் அவருக்காக நன்மைகளை எழுதிக் கொண்டே இருக்கிறது.

﴾3﴿ அவருடைய உடலுறுப்புகள் தஸ்பீஹ் செய்கின்றன.

﴾4﴿ அவருடைய தொழுகையின் முதல் தக்பீர் வீணாவதில்லை.

﴾5﴿ அவர் உறங்கும் போது, அல்லாஹ் அவரிடம் சில மலக்குகளை அனுப்பி, ஜின் மற்றும் மனிதர்களின் தீய காரியங்களிலிருந்து அவரை பாதுகாக்கிறான்.

﴾6﴿ மரண வேளையின் ஸகராத் அவருக்கு இலேசாக்கப்படுகிறது.

﴾7﴿ அவர் வுழுவோடு இருக்கும் வரை, இறைவனின் பாதுகாப்பில் இருக்கிறார். [10]

## இரட்டிப்பு நன்மைகள்

நிச்சயமாக களைப்பாக இருந்தாலும், சளி பிடித்திருந்தாலும், சளியால் தொண்டையில் உபாதை இருந்தாலும், தலை வலி மற்றும் நோயுற்று இருந்தாலும், வுழு செய்வது கடினமாக இருக்கும். ஆனால் யாரேனும் இந்த நிலைமையில் அதாவது வுழு செய்வது கடினமாக இருக்கும் போதும் வுழு செய்தால் அவருக்கு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது போல் இரட்டிப்பு நன்மைகள் கிடைக்கும். [11]

## குளிர் நாட்களில் வுழு செய்த சம்பவம்

ஹழ்ரத் உஸ்மான் ஙனி رَضِيَ اللهُ عَنْهُ அவர்கள் தனது அடிமை ஹுஃம்ரானிடம் வுழு செய்வதற்காக தண்ணீர் கேட்டார்கள், மேலும் அந்த குளிரான இரவில் வெளியே செல்ல விரும்பினார்கள். ஹுஃம்ரான் கூறுகிறார்கள், “நான் தண்ணீர் கொண்டு வந்தேன், அவர்கள் முகம் மற்றும் கைகளை


www.dawateislami.net

முஸ்தஃபா صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: "என்னை பற்றிய Zஸிக்ர் யாரிடம் செய்யப்பட்டதோ, உடனே அவர் என் மீது ஸலவாத் ஓதவில்லை என்றால், அவர் துரதிர்ஷ்டசாலி ஆகிவிட்டார்." (இப்னெ ஸுன்னி)

கழுவினார்கள். அப்பொழுது நான் கூறினேன், அல்லாஹ் உங்களுக்கு போதுமானவனாக இருக்கிறான். இரவோ மிகவும் குளிராக இருக்கிறது. அதற்கு அவர்கள் கூறினார்கள், நான் நாயகம் ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூற கேட்டிருக்கிறேன். சிறந்த முறையில் வுழு செய்யும் அடியானின், முந்தைய மற்றும் பிந்தைய குற்றங்களை அல்லாஹ் மன்னித்து விடுகிறான்." [12]

## வுழு செய்யும் முறை (ஷாஃபிஈ)

கஃபதுல்லாஹ்வின் பக்கம் முன்னோக்கி, சிறிது உயரமான இடத்தில் அமர்வது, இன்னும் தொடக்க சுன்னத்துகளை கடைபிடிக்கும் நிய்யத் செய்துக் கொள்வது சுன்னத் ஆகும். இந்த நிய்யத் செய்யவில்லை என்றாலும் வுழு கூடிவிடும் ஆனால் அந்த சுன்னத்துகளின் சிறப்புகள் கூடி வராது. அதற்கான நன்மைகள் கிடைக்காது. மனதில் கொள்ளும் உள்நோக்கத்தை 'நிய்யத்' என்று சொல்வார்கள். மனதிற்குள்ளே நிய்யத் செய்துக் கொள்வதற்கு முன்பே நிய்யத்தின் வார்த்தைகளை நாவால் மொழிந்துக் கொள்வது முஸ்தஹப் அதாவது விரும்பத்தக்கது ஆகும். எனவே நாவால் நிய்யத்தை இவ்வாறு கூற வேண்டும், "நான் வுழுவின் சுன்னத்துகளுடைய நிய்யத் செய்கிறேன்." பிறகு "தஅவ்வுத்" அதாவது اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْم மற்றும் "தஸ்மியஹ்" அதாவது بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْم ஓத வேண்டும். "தஸ்மியஹ்" ஓதும் பொழுது மனதில் நிய்யத் செய்துக் கொள்ள வேண்டும். உடனே இரண்டு கைகளையும் கழுவத் தொடங்க வேண்டும். இரண்டு கைகளையும் மூன்று, மூன்று முறை மணிக்கட்டு வரை கழுவ வேண்டும். கைகளை கழுவும் போது இதை ஓத வேண்டும்:

"اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ اَلْحَمْدُ لِلّٰهِ

الَّذِيْ جَعَلَ الْمَآءَ طَهُوْرًا"

("அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லாஷரீகலஹூ வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வ ரசூலுஹூ அல்ஹம்து லில்லாஹில்லZஸீ ஜஅலல் மாஅ தஹூரா")

இன்னும் மூன்று, மூன்று முறை வலப்பக்கமும், இடப்பக்கமும், மேலும், கீழும் என பற்களில் மிஸ்வாக் செய்ய வேண்டும். (ஒவ்வொரு முறையும் மிஸ்வாக் குச்சியை கழுவிக் கொள்ள வேண்டும்) ஹழ்ரத் இமாம் அபூ ஹாமித் முஹம்மத் பின் முஹம்மத் பின் முஹம்மத் கZஸ்ஸாலி رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: "மிஸ்வாக் செய்யும் போது, தொழுகையில் குர்ஆன் மஜீத் கிராஅத்தாக ஓதுவதற்காகவும், அல்லாஹுதஆலாவை திக்ர் செய்வதற்காகவும் நான் என் வாயை சுத்தம் செய்கிறேன் என்ற நிய்யத்தை மேற்கொள்ள வேண்டும்." [13] இப்பொழுது வலது கையால் கை கொள்ளளவு தண்ணீரைக் கொண்டு (ஒவ்வொரு முறையும் குழாயை மூடிவிட்டு) மூன்று முறை, வாய் கொப்பளிக்க வேண்டும். இன்னும் மூன்று முறை, மூக்கில் தண்ணீரை ஏற்ற வேண்டும். இதை செய்யும் முறையாவது, கை கொள்ளளவு தண்ணீரை எடுத்து அதிலிருந்து

முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: "காலையில் பத்து தடவையும், மாலையில் பத்து தடவையும் என் மீது ஸலவாத் ஓதியவருக்கு கியாமத் நாளன்று எனது பரிந்துரை கிடைக்கும்." (மஜ்மஉஸ் Zஸவாஇத்)

சிறிதளவு வாயில் எடுத்துக் கொண்டு, மீதமான தண்ணீரை மூக்கில் ஏற்ற வேண்டும். வாயில் இருக்கும் தண்ணீரை வாய்க்குள்ளே பற்களின் முன் பக்கம், மற்றும் அண்ணத்தின் இறுதி வரைக்கும் சென்றடையும் வரை நன்றாக சுழற்ற வேண்டும். கொப்பளிக்கும் போது தலையை உயர்த்தி, தண்ணீரை தொண்டையில் நிறுத்தி "கர கர" என்று சத்தம் உண்டாக்கி பிறகு கொப்பளித்த தண்ணீரை உமிழ வேண்டும். மேலும் மூக்கின் வேர் வரைக்கும் தண்ணீரை ஏற்ற வேண்டும் பிறகு இடது கையின் சிறு விரலை மூக்கின் துளையில் நுழைத்து மூக்கை சுத்தம் செய்துக் கொள்ள வேண்டும். இது போலவே இரண்டாவது முறையும், மூன்றாவது முறையும் கூட ஒரு கை கொள்ளளவு தண்ணீரைக் கொண்டு வாய்க் கொப்பளிக்க வேண்டும் இன்னும் மூக்கிலும் தண்ணீர் ஏற்ற வேண்டும். நோன்பு நோற்றுக் கொண்டிருந்தால், தண்ணீரை தொண்டையில் நிறுத்தி "கர கர" செய்ய வேண்டாம் மற்றும் மூக்கின் வேர் வரைக்கும் தண்ணீரை ஏற்ற வேண்டாம். இப்பொழுது வுழுவின் ஃபர்ளுகளை கடைபிடிக்கும் நிய்யத்தை இவ்வாறு நாவால் மொழிந்துக் கொள்ள வேண்டும்:

"نَوَيْتُ اَدَاءَ فَرْضِ الْوُضُوْءِ"

"நவைத்து அதாஅ ஃபர்ளில் வுழு"

"நான் வுழுவின் ஃபர்ளுகளை கடைபிடிக்கும் நிய்யத்தை செய்கிறேன்" எனும் இந்த நிய்யத்தை மனதில் வைத்துக் கொண்டு முகத்தை கழுவுவதற்குத் தொடங்க வேண்டும். இப்பொழுது மனதில் நிய்யத் இருப்பது ஃபர்ளு அதாவது கடமை ஆகும். முகத்தின் ஒரு பகுதி கழுவிய பிறகு இந்த நிய்யத் செய்தால், நிய்யத் செய்வதற்கு முன் கழுவப்பட்ட பகுதியை நிய்யத் செய்துக் கொண்ட பின்னர் மீண்டும் கழுவிக் கொள்ள வேண்டும். நெற்றியில் முடி வளரும் இடத்தில் இருந்து தொடங்கி முகவாயுடைய எலும்பின் கடைசி வரைக்கும் இன்னும் ஒரு காதின் மடலில் இருந்து மற்றொரு காதின் மடல் வரைக்கும் எல்லா இடத்திலும், இன்னும் ஒவ்வொரு முடியின் முனையிலிருந்து அதன் அடி வரைக்கும் தண்ணீர் பாயும் படியாக முழு முகத்தையும் மூன்று முறை கழுவ வேண்டும். முகத்தின் முடிகள் அல்லது தாடி மிகவும் அடர்த்தியாக இருந்தால் [*] அவற்றின் உள் பக்கத்தை கழுவ வேண்டியது வாஜிப் அல்ல. இன்னும் இஹ்ராம் கட்டாமல் இருந்தால், மூன்று முறை புதிதாக கையளவு தண்ணீரைக் கொண்டு (குழாயை மூடிவிட்டு) வலது கை விரல்களை நன்றாக விரித்து கழுத்தின் பக்கத்தில் இருந்து நுழைத்து முன் பக்கமாக வெளியே எடுத்து தாடியை நன்றாக கிலால் செய்ய வேண்டும். இன்னும் முகத்தின் மீது காதுகளின் முன்னால் உள்ள

[*] அடர்த்தியான தாடி என்பதின் விளக்கம் என்னவென்றால், பேசும் பொழுது தாடியின் அடியில் இருக்கும் சருமம் தென்படாமல் இருக்க வேண்டும்.
(ஃபத்ஹுல் முஈன், பாபுஸ் ஸலாத், ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலாத், பக்கம்: 48, தார் இப்னெ ஹஸம் பேரூத்.)



www.dawateislami.net

முடிகளை ஈரக் கையால் தடவ வேண்டும். இஹ்ராம் கட்டி இருந்தால் தாடியை கிலால் செய்யும் போது முடி உதிர்ந்து விடாமல் மெதுவாக செய்ய வேண்டும் அல்லது கிலால் செய்யாமல் விட்டுவிட வேண்டும். பிறகு முதலில் வலது கையை விரல்களின் நுனிகளில் இருந்து தொடங்கி முழங்கையையும் சேர்த்து மூன்று முறை கழுவ வேண்டும். இதேபோல் இடது கையையும் கழுவ வேண்டும். இரண்டு கைகளையும் புஜங்களை எட்டும் வரைக்கும் கழுவுவது சுன்னத் ஆகும். மோதிரத்தை நகர்த்தி சுத்தம் செய்ய வேண்டும். இன்னும் (குழாயை மூடிவிட்டு) “தஷ்பீக்” உடைய நிலையில் (அதாவது ஒரு கையின் விரல்களை மற்றொரு கையின் விரல்களுக்கிடையில் நுழைத்து) நன்றாக கிலால் செய்ய வேண்டும். சாதரணமாக மக்கள் மூன்று முறை கை கொள்ளளவு தண்ணீர் எடுத்து முழங்கை வழியாக செல்லும்படி கீழே விட்டு விடுகிறார்கள். இப்படி செய்வதால் தண்ணீர் மணிக்கட்டில் இருந்து முழங்கை வரை எல்லா இடங்களிலும் சென்றடையாத ஐயம் இருக்கலாம். ஆகவே மேற்கொண்டு பயான் செய்திருப்பது போல் கைகளை கழுவவும். கை கொள்ளளவு தண்ணீர் எடுத்து முழங்கை வழியாக ஓட விடுவது கோரிக்கை அல்ல. மாறாக (அனுமதியின்றி இவ்வாறு செய்வது) தண்ணீரை வீண் விரயம் செய்வதாகும். இப்பொழுது மூன்று முறை ஒவ்வொரு முறையும் கைகளை நீரால் நனைத்து (குழாயை மூடிவிட்டு) தலையை மஸ்ஹூ இவ்வாறு செய்யவும். இரண்டு கைகளின் பெரு விரல்களையும் தலையின் இரண்டு பக்க நெற்றிப் பொட்டில் வைத்து கலிமா விரல்களை ஒன்றிணைத்து தலையின் தொடக்கப் பகுதியில் வைக்க வேண்டும். பிறகு மற்ற விரல்களுடன் இணைத்து அப்படியே பின் கழுத்து வரை இழுத்துக் கொண்டு செல்ல வேண்டும். திரும்பக்கூடிய தலை முடிகளாக இருந்தால், அந்த விரல்களை அப்படியே பின் கழுத்தில் இருந்து தலையின் தொடக்கப் பகுதிக்கு கொண்டு வர வேண்டும். இதுபோன்ற தலை முடி இல்லாவிட்டால் தலையின் தொடக்கப் பகுதியில் இருந்து பின் கழுத்து வரை இழுத்துக்கொண்டு செல்வதே போதுமானது. தலையில் தலைப்பாகை அல்லது தொப்பி அணிந்து இருந்தால், நாசியா (அதாவது தலையின் முன் பகுதி) மீது மஸ்ஹூ செய்த பிறகு தலைப்பாகை அல்லது தொப்பி மீது மஸ்ஹூ செய்வது கூட போதுமானது. பிறகு மூன்று முறை ஒவ்வொரு முறையும் புதிய நீரால் கலிமா விரல்களினால் காது மடல்களின் உட்புற மேற்பரப்பையும், கட்டை விரல்களால் காதுகளின் வெளிப்புற மேற்பரப்பையும் மஸ்ஹூ செய்ய வேண்டும். பிறகு மூன்று முறை கலிமா விரல்களை தண்ணீரில் நனைத்து காதுகளின் துளைக்குள் வைக்க வேண்டும். இன்னும் மூன்று முறை உள்ளங்கைகளை தண்ணீரில் நனைத்து காதுகளின் மீது வைக்க வேண்டும். தலையை மஸ்ஹூ செய்வதற்கு முன்பு குழாயை நன்றாக மூடுவதைப் பழக்கமாகிக்கொள்ள வேண்டும். எந்த காரணமும் இல்லாமல் குழாயை திறந்தபடி விட்டுவிடுவது, அல்லது குழாயை அரை குறையாக மூடுவதினால் தண்ணீர் சொட்டிக்கொண்டிருப்பது ஆகியவை வீண் விரயம் ஆகும். முதலில் வலது பிறகு இடது கால் மூன்று முறை ஒவ்வொரு முறையும் கால்விரல்களில் இருந்து தொடங்கி



www.dawateislami.net

கணுக்காலுக்கும் மேல் வரைக்கும் கழுவ வேண்டும். ஆனால் முழு முழங்காலையும் சேர்த்து கழுவுவது சுன்னத் ஆகும். இரு கால்களின் கால்விரல்களுக்கு இடையில் கிலால் செய்வது சுன்னத் ஆகும். (கிலால் செய்யும் போது குழாயை மூடி வைக்க வேண்டும்) இதைச் செய்வதற்கான சிறந்த வழி, இடது கையின் சுண்டு விரலால் வலது காலின் சுண்டு விரலின் அடியில் இருந்து தொடங்கி, பெரு விரலில் முடிக்க வேண்டும். மேலும் இடது கையின் சுண்டு விரலால் இடது காலின் பெரு விரலில் இருந்து தொடங்கி சுண்டு விரலில் முடிக்க வேண்டும்.

இமாம் அபூ ஹாமித் முஹம்மத் பின் முஹம்மத் பின் முஹம்மத் கZஸ்ஸாலி رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: ஒவ்வொரு உறுப்பையும் கழுவும்போதும் “என்னுடைய இந்த உறுப்பின் பாவங்கள் வெளியேறுகின்றன.” என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். [14]

வுழு செய்து முடித்த பிறகு, உங்கள் பார்வையை வானத்தின் பக்கம் உயர்த்தி, கிப்லாவை முன்னோக்கி இதை மூன்று முறை ஓத வேண்டும்:

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَللّٰهُمَّ اجْعَلْنِيْ مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِيْ مِنَ الْمُتَطَهِّرِيْنَ وَاجْعَلْنِيْ مِنْ عِبَادِكَ الصَّالِحِيْنَ

سُبْحٰنَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اَنْتَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ وَصَلَّى اللهُ عَلٰى

سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلَّمَ

பிறகு கைகளைத் தாழ்த்தி, கிப்லாவை முன்னோக்கி மூன்று முறை சூரதுல் கத்ரை ஓதிக்கொள்ளவும்.

## வுழு செய்த பின் மீதமுள்ள தண்ணீர் எல்லா நோய்களுக்கும் நிவாரணமாகும்

லோடா போன்றவற்றிலிருந்து வுழு செய்த பின்னர் மீதமுள்ள தண்ணீரை குடிப்பதில் நோய் நிவாரணம் இருக்கிறது. ஃபத்ஹுல் முஈனில் வருகிறது: வுழு செய்த பின்னர் மீதமுள்ள தண்ணீரைக் குடிப்பது சுன்னத் ஆகும். ஏனெனில் தூய ஹதீஸில் வருகிறது: வுழு செய்த பின்னர் மீதமுள்ள தண்ணீரில் எல்லா நோய்களுக்கும் நிவாரணம் உண்டு.[15] அல்லாமா அப்துல் ஙனி நாபுலுஸி ஹனஃபி رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: நான் நோய்வாய்ப்பட்டு இருக்கும்போது, வுழு செய்த பின்னர் மீதமுள்ள தண்ணீரால் நோய் குணமாவதை அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறேன். சத்திய நபி பெருமானார் நாயகம் صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்களின் “திப்பெ நபவி” எனும் இந்த சத்தியமான மருத்துவத்தில் காணப்படும் வழிகாட்டுதலை ஏற்று நான் இந்த முறையை தேர்ந்தெடுத்தேன். [16]

صَلُّوْا عَلَى الْحَبِيْب ! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلَّم



www.dawateislami.net

முஸ்தஃபா صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: "என்னை பற்றிய Zஸிக்ர் யாரிடம் செய்யப்பட்டதோ, அவர் என் மீது ஸலவாத் ஓதவில்லை என்றால், அவர் சுவனத்தின் பாதையை விட்டு விட்டார்." (தபரானி)

## சுவனத்தின் எட்டு வாயில்களும் திறந்து கொள்ளும்

புனித ஹதீஸில் இருக்கிறது: நல்ல முறையில் வுழு செய்த பின்னர் வானத்தின் பக்கம் பார்வையை உயர்த்தி கலிமா ஷஹாதத் ஓதியவருக்காக சுவனத்தின் எட்டு வாயில்களும் திறந்து வைக்கப்படும். அவர் விரும்பியபடி எந்த வாயிலில் இருந்து வேண்டுமானாலும் நுழையலாம். [17]

## கண் பார்வை ஒருபோதும் பலவீனம் ஆகாது

வுழு செய்த பின்னர் வானத்தைப் பார்த்து, சூரா "اِنَّاۤ اَنْزَلْنٰهُ" (இன்னா அன்Zசல்னா) ஓதிக் கொண்டவருக்கு கண்பார்வை ஒருபோதும் பலவீனமாக ஆகாது.[18]

## வுழு செய்த பிறகு சூரதுல் கத்ர் மூன்று முறை ஓதுவதின் சிறப்புகள்

பரிசுத்த ஹதீஸில் வருகிறது: வுழு செய்த பிறகு சூரதுல் கத்ர் ஒரு முறை ஓதியவர் ஸித்தீகீன்களில் அதாவது உண்மையாளர்களில் கருதப்படுவார். இரண்டு முறை ஓதியவர் ஷுஹதாக்களில் அதாவது தியாகிகளில் கணக்கிடப்படுவார். மூன்று முறை ஓதியவரை அல்லாஹ் மஹ்ஷர் மைதானத்தில் தன்னுடைய நபிமார்களுடன் வைத்திருப்பான். [19]

## வுழு செய்த பிறகு ஓத வேண்டிய துஆ

اَللّٰهُمَّ اجْعَلْنِيْ مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِيْ مِنَ الْمُتَطَهِّرِيْنَ وَاجْعَلْنِيْ مِنْ عِبَادِكَ الصَّالِحِيْنَ

**தர்ஜுமா:** அல்லாஹ்வே! அதிகமாக தௌபா செய்கிறவர்களில் ஒருவனாக என்னை ஆக்கி அருள்வாயாக! என்னை தூயவர்களில் சேர்த்து வைப்பாயாக! மேலும் என்னை உனது நேர்மையான அடியார்களில் சேர்த்துக் கொள்வாயாக!

## வுழு செய்த பிறகு இதையும் ஓதிக்கொள்ளுங்கள்

سُبْحٰنَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ اَشْهَدُ اَنْ لَّاۤ اِلٰهَ اِلَّاۤ اَنْتَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ

**தர்ஜுமா:** அல்லாஹ்வே! நீ புனிதமானவன், அனைத்து சிறப்புகளும் உனக்கே உரித்தானது. உன்னைத் தவிர வணக்கத்திற்கு உரியவன் யாரும் இல்லை என்று நான் சான்று பகர்கின்றேன். நான் உனது மன்னிப்பை நாடுகிறேன். இன்னும் உனது சமூகத்தில் மனம் திருந்தி தௌபா செய்கிறேன்.

வுழு செய்த பிறகு இதை ஓதியவருக்கு, இது முத்திரை பதிக்கப்பட்டு அர்ஷின் கீழ் வைக்கப்பட்டு விடும். மேலும் மறுமை நாளில் இதை ஓதியவருக்கு இது வழங்கப்படும். [20]

صَلُّوْا عَلَى الْحَبِيْب ! صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلَّم



www.dawateislami.net

## வுழுவின் 6 ஃபர்ளுகள்

(1) நிய்யத் செய்துக் கொள்வது: ✵ வுழு செய்பவர் வுழுவின் ஃபர்ளை நிறைவேற்றுவதற்கு அல்லது ஹதஸ் எனும் தொடக்குகளை அகற்றுவதற்கு நிய்யத் செய்துக் கொள்ள வேண்டும். ✵ முகத்தின் முதல் பகுதியைக் கழுவும்போது இந்த நிய்யத் செய்துக் கொள்வது ஃபர்ளு எனும் கடமையாகும். ✵ முகத்தின் ஒரு பகுதி கழுவிய பிறகு நிய்யத் செய்துக் கொண்டால், நிய்யத் செய்வதற்கு முன்பு கழுவப்பட்ட பகுதி மீண்டும் கழுவப்பட வேண்டும்.

(2) முகம் கழுவுவது.

(3) முழங்கை முதல் கொண்டு இரு கைகளையும் கழுவுவது.

(4) தலையின் ஒரு பகுதியை மஸ்ஹு செய்வது.

(5) கணுக்கால் முதல் கொண்டு இரு கால்களையும் கழுவுவது.

(6) ஃபர்ளுகளின் ஒழுங்கான வரிசை முறையை பராமரிப்பது. (அதாவது, ஃபர்ளான உறுப்புகளில் முதலில் முகத்தைக் கழுவுவது, பிறகு முழங்கைகள் உட்பட கைகளை கழுவுவது, பிறகு தலையை மஸ்ஹு செய்வது, பிறகு இரு கால்களையும் கழுவுவது). [21]

## கழுவுதல் என்பதின் விவரம்

ஏதேனும் ஒரு உறுப்பை கழுவுவது என்பதின் பொருள், அந்த உறுப்பின் ஒவ்வொரு பகுதியிலும் தண்ணீர் பாய வேண்டும். வெறுமெனே நனைந்து விட்டால் அல்லது எண்ணெயை தடவியது போல் தண்ணீரைத் தடவிக் கொள்வதை கழுவுவது என்று கூற முடியாது. இவ்வாறு செய்வதால் வுழு மற்றும் குளிப்பு நிறைவேறாது. [22]

## வுழுவின் 44 சுன்னத்துக்கள்

வுழு செய்யும் முறை (ஷாஃபிஈ) யில் ஏற்கனவே சில சுன்னத்துக்களைப் பற்றி பயான் செய்யப்பட்டது. இதைப் பற்றி மேலும் பரிசீலிப்போம்:

✵ கிப்லாவை முன்னோக்குவது, ✵ தண்ணீர் தெறித்து அதன் திவலைகள் அடைய முடியாதபடி உயரமான இடம், ✵ அமர்ந்துக் கொள்வது, ✵ வுழுவின் சுன்னத்துக்களின் நிய்யத் செய்துக் கொள்வது இன்னும் நிய்யத்தின் வார்த்தைகளை நாவால் பகர்வது, மேலும் اَعُوْذُ بِاللّٰه மற்றும் بِسْمِ اللّٰه ஓதும்போது நிய்யத்தை மனதில் உறுதி செய்துக் கொள்வது, ✵ “اَعُوْذُ بِاللّٰه”, ✵ “بِسْمِ اللّٰه”, ✵ கலிமா ஷஹாதத் ஓதுவது, ஷஹாதத் கலிமா ஓதிய பின் இறைவனை புகழ்வது, ✵ இரண்டு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவுவது, ✵ மிஸ்வாக் செய்வது,



www.dawateislami.net

முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: “என் Zஸிக்ர் ஒருவரிடம் செய்யப்பட்ட பிறகு அவர் என் மீது ஸலவாத் ஓதவில்லை என்றால், அவர் மக்களிடையே மிகவும் கஞ்சத்தனமானவர் ஆவார். (முஸ்னத் அஹ்மத்)

---

❈ வாய் கொப்பளிப்பது, ❈ நாசிக்கு நீர் செலுத்துவது ❈ வாய் கொப்பளிப்பதற்கும் இன்னும் மூக்கில் ஏற்றுவதற்கு மூன்று கைக்கொள்ளளவு தண்ணீரை சேகரிப்பது ❈ நோன்பு நோற்காமல் இருந்தால், அண்ணத்தின் கடைசி பகுதி வரைக்கும் இன்னும் மூக்கின் வேர் வரை சென்றடையும்படி, மூக்கில் தண்ணீரை ஏற்றுவதை மிகைப்படுத்துவது, ❈ இடது கையின் சுண்டு விரலை மூக்கினுள் நுழைத்து மூக்கை சுத்தம் செய்வது, ❈ முகத்தை மேலிருந்து கீழாக கழுவ ஆரம்பிப்பது, ❈ ஒருமித்தமாக இரண்டு கைகளாலும் முகத்தை கழுவுவது, ❈ கண்களில் அழுக்கு இல்லாதபோதும் விழி முனைகளை சுத்தம் செய்வது, அழுக்கு இருந்தால், அதை சுத்தம் செய்யாமல் தண்ணீர் கீழே பாயவில்லை என்றால், அவற்றை சுத்தம் செய்து தண்ணீரைப் பாய வைப்பது கடமை ஆகும். வலது கண்ணின் மூலைகளை வலது கையின், இன்னும் இடது கண்ணின் மூலைகளை இடது கையின் கலிமா விரலால் சுத்தம் செய்வது, இதேபோல், ஒவ்வொரு இடத்தின் சிறப்பைப் பொருத்து அந்த இடம் கழுவப்படாமல் இருப்பதைக் கவனத்தில் கொள்வது, (கணுக்கால்கள், குதி கால்கள், உள்ளங்கால்கள், குதி கால்களின் மேல் இருக்கும் தடினமான கால் நரம்புகள், விரல்களின் இடையில் இருக்கும் பகுதி இன்னும் முழங்கைகள் போன்றவை), ❈ முகத்தில் தண்ணீரை அடித்துக் கொள்ளாமல் இருப்பது, ❈ அடர்த்தியான தாடி மற்றும் முகத்தின் அடர்த்தியான முடிகளை கிலால் செய்வது, ❈ முகம் மற்றும் ❈ கை கால்களின் ஒளியை விரிவுபடுத்துவது, அதாவது, எங்கெல்லாம் தண்ணீர் பாய்வது ஃபர்ளாக இருக்குமோ அந்த இடத்தை சுற்றி சிறிது விரிவுபடுத்திக் கொள்வது, முகத்தோடு சேர்த்து தலையின் முன் பகுதி, இரண்டு காதுகள், கழுத்தின் மேல் பகுதி ஆகியவை முகத்தை கழுவுவதற்கான வரம்பு ஆகும், எனவே இவை அனைத்தையும் சேர்த்துக் கழுவுவது, கைகளுக்கான வரம்பு, முழங்கைகளுக்கு சிறிது மேலேயும், கால்களுக்கான வரம்பு, கணுக்கால்களுக்கு மேலேயும் முழு முழங்காலும் ஆகும் எனவே இவைகளையும் சேர்த்துக் கழுவுவது, ❈ தண்ணீர் ஊற்றும்போது உறுப்புகளைத் தேய்ப்பது, ❈ கை, கால்களை கழுவும் போது விரல்களில் இருந்து தொடங்குவது, ❈ கைகளின் மற்றும் ❈ கால்களின் விரல்களில் கிலால் செய்வது, ❈ முதலில் வலது பிறகு இடது என்று கை கால்களைக் கழுவுவது, ❈ மோதிரம் தளர்வாக இருந்தால் அதை அசைத்து அதற்கு கீழ் இருந்து தண்ணீர் பாய்ந்து விட்டது என்பதை உறுதி செய்து கொள்வது, அதுவே இறுக்கமாக இருந்தால் அதை நன்றாக அசைத்து அதன் கீழ் இருந்து தண்ணீரை பாய வைப்பது ஃபர்ள் ஆகும், ❈ முழு தலையையும் மஸ்ஹு செய்வது ❈ காதுகளை மஸ்ஹு செய்வது ❈ வுழு செய்யும்போது இறுதி வரை நிய்யத்தை மனதில் உறுதியாக வைத்திருப்பது ❈ ஒன்றின் பின் ஒன்றாக வுழு செய்வது. அதாவது காற்று, மனநிலை, வானிலை மற்றும் இடத்தின் தன்மையை பொறுத்து மிதமான நிலையை கடைபிடித்து ஒரு உறுப்பு காய்வதற்கு முன்னால் அடுத்த உறுப்பை கழுவ தொடங்குவது, தாஇமுல்



www.dawateislami.net

ஹதஸ் (அதாவது வுழுவில் நிலைத்திருக்க முடியாதவர்) இன்னும் யாருக்கு தொழுகையின் நேரம் நெருக்கமாக உள்ளதோ அவர்களுக்கு ஒன்றன் பின் ஒன்றாக வுழு செய்வது ஃபர்ள் ஆகும் ⁕ கழுவுவது, மஸ்ஹு செய்வது, கிலால் (தேய்ப்பது) செய்வது, மிஸ்வாக் செய்வது, இன்னும் துஆக்களை ஓதுவது ஆகிய இந்தக் காரியங்களை மூன்று மூன்று முறை செய்வது, ⁕ வுழு செய்தபின் கையை உதறாமல் இருப்பது, ஏனெனில் அது ஷைத்தானின் விசிறி ஆகும். ⁕ வுழு செய்த உறுப்பை தேவையின்றி துடைக்காமல் இருப்பது, ⁕ தேவையின்றி பேசாமல் இருப்பது, ⁕ அருவியின் கரையில் இருந்தாலும் வீண் விரயத்தை தவிர்த்து கொள்வது, ⁕ குறைந்தபட்சம் ஒரு லோட்டா அல்லது ஒரு குவளைத் தண்ணீரில் வுழு செய்வது, ⁕ வுழு செய்து முடித்த பிறகு மியானி (அதாவது மர்மஸ்தானத்தின் அருகில் இருக்கும் கால் சட்டை அல்லது பைஜாமாவின் பகுதி) மீது தண்ணீர் தெளித்துக் கொள்வது (தண்ணீர் தெளிக்கும் போது மேல்சட்டை ஆன குர்தாவில் படாமல் பாதுகாத்துக் கொள்வது நல்லது. வுழு செய்யும் பொழுதும் இன்னும் மாறாக எல்லா நேரங்களிலும் மியானியை திரைமறைவில் அதாவது குர்தாவின் முன் பக்கத்தால் அல்லது போர்வையால் மறைத்து வைப்பது மானத்தை காத்து கொள்வதாகும்) ⁕ பாத்திரத்திலிருந்து வுழு செய்யும் பொழுது மீதமாகி விட்ட தண்ணீரை குடிப்பது, ⁕ வுழு செய்யும் போது தேவையின்றி மற்றவர்களின் உதவியை நாடாமல் இருப்பது, ⁕ வுழு செய்தபிறகு கைகளையும் கண் பார்வையையும் ஆகாயத்தின் பக்கம் உயர்த்தி கிப்லாவை முன்னோக்கி இதை ஓதுவது:

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ اَللّٰهُمَّ اجْعَلْنِيْ
مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِيْ مِنَ الْمُتَطَهِّرِيْنَ وَاجْعَلْنِيْ مِنْ عِبَادِكَ الصَّالِحِيْنَ سُبْحٰنَكَ اللّٰهُمَّ
وَبِحَمْدِكَ اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اَنْتَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ وَصَلَّى اللهُ عَلٰى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلَّمَ

⁕ வுழு செய்த பிறகு சூரதுல் கத்ர் ஓதுவது, ⁕ இரண்டு ரக்அத்துகள் தொழுவது. வுழு செய்த பிறகு நிறைய நேரம் கழிந்து விட்டால், இரண்டு ரக்அத் தொழுகை நேரம் முடிந்து விடுகிறது. [23]

## வுழுவில் 10 வெறுக்கத்தக்க விடயங்கள்

⁕ வாய் கொப்பளிக்காமல் இருப்பது, ⁕ மூக்கில் தண்ணீர் ஏற்றாமல் இருப்பது, [24] ⁕ தேவையானதை விட அதிகமான தண்ணீரை பயன்படுத்துவது [25] ⁕ நோன்பு நோற்பவர் சூரியன் உச்சியை அடைந்த பிறகு மிஸ்வாக் செய்வது, [26] ⁕ நோன்பு நோற்பவர் வாய் கொப்பளிப்பதிலும் மற்றும் மூக்கில் தண்ணீர் ஏற்றுவதிலும் மிகைப்படுத்துவது ⁕ மூன்று முறைக்கும் அதிகமாக கழுவுவது அல்லது



www.dawateislami.net

மஸ்ஹு செய்வது, ✵ மூன்று முறைக்கும் குறைவாக கழுவுவது அல்லது மஸ்ஹு செய்வது, ✵ தேவையின்றி யாரிடமிருந்தும் உதவியை நாடுவது, ✵ இடது கை அல்லது இடது காலை, வலது கை அல்லது வலது காலுக்கு முன்பாக கழுவுவது [27] ✵ அடர்த்தியான தாடியை கிலால் செய்யாமல் விட்டுவிடுவது. [28]

## வெயிலில் சூடான நீரின் விளக்கம்

வெப்பம் மிகுந்த நாட்டில் வெப்பமான பருவகாலத்தில், தங்கம் மற்றும் வெள்ளி தவிர வேறு ஒரு உலோக பாத்திரத்தில் சூரிய வெயிலில் சூடான நீர், சூடாக இருக்கும் வரை அதை வுழு, குளிப்பு மற்றும் அணிந்திருக்கும் உடைகளின் மீதும் பயன்படுத்துவது மக்ரூஹ் தன்Zஸீஹி ஆகும், இந்த நீரைப் பயன்படுத்துவதால் பரஸ் (அதாவது உடலில் வெண் குஷ்டம் பற்றிய ஐயம்), உள்ளது. இருப்பினும் வுழு அல்லது குளிப்பை நிறைவேட்டினால் கூடிவிடும். [29]

## பயன்படுத்தப்பட்ட தண்ணீரின் முக்கிய மஸ்அலாக்கள்

வுழு இல்லாத ஒருவர் வுழுவில் முகத்தை கழுவிய பின்னர் தன்னுடைய கையையோ அல்லது குளிப்பு கடமையானவர், குளிக்கும் நிய்யத் செய்துக் கொண்ட பிறகு, உடலின் ஒரு பகுதியை இரண்டு "குல்" அளவிற்கு (191 கிலோ) குறைவான தண்ணீரில் (உதாரணத்திற்கு தண்ணீர் நிறைந்த குவளை அல்லது வாளியில்) போட்டு விட்டால், இன்னும் அவரது எண்ணம் கை கொள்ளளவை நிரப்புவது என்று இல்லாமல் இருந்திருந்தால், உறுப்பை விட்டு நீங்கியவுடன் அந்த தண்ணீர் பயன் படுத்தப்பட்ட தண்ணீர் ஆகிவிட்டது. அதனால் இப்பொழுது அது வுழு அல்லது குளிப்பை நிறைவேற்றுவதற்கும் இன்னும் அசுத்தங்களை தூரமாக்குவதற்கும் தகுதியற்றதாக ஆகி விடுகிறது. [30] ஆம்! மஸ்னூன் (அதாவது சுன்னத்தான) முறையில் உபயோகப்படுத்தப்பட்ட தண்ணீர், (வுழு மற்றும் குளிப்பில்) இரண்டாவது மற்றும் மூன்றாவது முறையாக கழுவுவதற்கு பயன்படுத்தப்பட்டது, அல்லது வுழுவுடன் உள்ள ஒருவர் இரண்டாம் முறை வுழு செய்தால் அல்லது சுன்னத்தான குளிப்பை நிறைவேற்றிய தண்ணீர், ஷரீஅத்படி உபயோகப்படுத்தப்பட்ட தண்ணீராக கருதப்படாது) இதைக் கொண்டு வுழு அல்லது குளிப்பை நிறைவேற்றவும் இன்னும் அசுத்தத்தை அகற்றவும் செய்யலாம். [31]

## மண் கலந்து கலங்கலான தண்ணீரால் வுழு கூடுமா கூடாதா

✵ குங்குமப்பூ மற்றும் மலை உப்பு போன்ற சுத்தமான பொருட்களில் இருந்து தண்ணீரை பாதுகாப்பது சாத்தியமாகும். இப்பொருட்கள் தண்ணீரில் மிகவும் அதிகமாக மாற்றம் உண்டாகும் வரை கரைந்து விட்டால், எந்த நிபந்தனையுமின்றி இதை "தண்ணீர்" என்று கூற முடியாது. (இது போல சுவை, நிறம் மற்றும் வாசனையில், தண்ணீரின் பண்புகளில் ஏதேனும் ஒன்று மாறிவிட்டால் [32]) அந்த தண்ணீர்

சுத்தமானது அல்ல (இதைக் கொண்டு தூய்மை அடைய முடியாது) ஆனால் இப்பொருட்களின் மூலம் உண்டாகும் மாற்றம் எந்த நிபந்தனையுமின்றி இதை "தண்ணீர்" என்று கூறும் அளவிற்கு குறைவாக இருந்தால் இந்தத் தண்ணீரைக் கொண்டு தூய்மை அடைய முடியும்.

❈ தண்ணீர் தேங்கி இருக்கும் அல்லது பாய்ந்து செல்லும் இடத்தில் உள்ள சேறு, மற்றும் பாசி தண்ணீரில் கலந்து விடுவதாலும், அல்லது நீண்ட காலம் ஒரே இடத்தில் தண்ணீர் தேங்கி நிற்பதால் தண்ணீரில் மாற்றம் உண்டாகி விட்டாலும், இன்னும் அந்த மாற்றம் அதிகமாக இருந்தாலும் சரி, அந்தத் தண்ணீரைக் கொண்டு தூய்மை அடைய முடியும். ஏனென்றால் இவற்றில் தண்ணீரைக் காப்பது மிகவும் கடினம் ஆகும்.[33] (ஆனால் இது போன்ற மாற்றங்கள் உண்டான பின்பும் எந்த நிபந்தனையுமின்றி இதை "தண்ணீர்" என்றே கூறப்படும். [34])

## தஸவ்வுஃப் எனும் சூஃபித்துவத்தின் மகத்தான மதனி குறிப்பு

ஹழ்ரத் இமாம் அபூ ஹாமித் முஹம்மத் பின் முஹம்மத் பின் முஹம்மத் கZஸ்ஸாலி رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: "வுழு செய்துக் கொண்ட பிறகு நீங்கள் தொழுகையின் பக்கம் கவனம் செலுத்தும் போது இதை "தஸவ்வுர்" (அதாவது கற்பனை) செய்து பாருங்கள், அதாவது மக்களின் பார்வையில் தென்படக்கூடிய உறுப்புகள் வெளிப்புறமாக தூய்மையாகி விட்டன, ஆனால் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தாமல் இறைவனின் சமூகத்தில் முனாஜாத்துகளை செய்வது அடக்கத்திற்கு எதிரானதாகும். ஏனெனில் பரிசுத்தமான அல்லாஹ் உள்ளங்களையும் பார்க்கக்கூடியவன்." மேலும் கூறுகிறார்கள்: "உள்ளத்தின் தூய்மை (அதாவது சுத்திகரிப்பு) தௌபா செய்வது, பாவ காரியங்களை கைவிடுவது இன்னும் நல்ல ஒழுக்கங்களை பின்பற்றுவது ஆகியவற்றின் மூலம் உண்டாகிறது என்பதை வெளிப்புற உறுப்புகளின் மீது வுழு செய்பவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். பாவங்களின் கறைகளிலிருந்து தன் உள்ளத்தை தூய்மைபடுத்தாமல், வெறும் வெளிப்புற தூய்மை மற்றும் அழகு, அலங்காரத்தைக் கொண்டே திருப்தி அடைபவனின் உதாரணம், ஒரு ராஜாவை தனது வீட்டிற்கு அழைத்து, வீட்டிற்கு வெளியில் பல வண்ணங்கள் தீட்டி அழகாக பிரகாசிக்க வைத்து, வீட்டின் உட்புறத்தின் தூய்மைக்கு கவனம் செலுத்தாமல் விட்டுவிடுபவனைப் போன்றதாகும். இப்போது இதுபோன்ற சந்தர்ப்பத்தில், ராஜா அந்த வீட்டிற்குள் வந்து அசுத்தங்களைப் பார்க்கும்போது, அவர் கோபப்படுவாரா அல்லது அவனை பொருந்திக் கொள்வாரா என்பதை உணர்வுள்ள ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும்." [35]

## உடலின் எந்தப் பகுதியிலாவது காயம் இருந்தால்...

❈ வுழு செய்ய வேண்டிய உறுப்புகளின் எந்தப் பகுதியிலாவது நோய் அல்லது காயம் இருந்து அதன்மீது தண்ணீரைப் பயன்படுத்துவதின் மூலம் தீங்கு ஏற்படும் என்ற பயம் இருந்தால், அதாவது

குணமாவதில் தாமதம் உண்டாகும் என்ற பிரச்சினை இருந்தால், தயம்மம் செய்துக் கொள்ள வேண்டும், கழுவுவதற்கு சாத்தியமான பகுதியை கழுவ வேண்டும், காயத்திற்கு அருகிலுள்ள பகுதியை, தண்ணீர் காயத்தின் மீது பாய்ந்து விடாமல் ஒரு துணியை நனைத்து மிருதுவாக துடைத்துக் கொள்ள வேண்டும்.

❈ காயம் உள்ள இடம் தயம்மம் செய்யப்பட வேண்டிய இடங்களில் நின்றும் உள்ளதாக இருந்து, அதை மண்ணால் மஸ்ஹு செய்வதால் ஏதேனும் தீங்கு ஏற்படும் என்ற பயம் இல்லை என்றால், அதை மஸ்ஹு செய்வது வாஜிப் ஆகும்.

❈ காயமடைந்த உறுப்பு கழுவப்படும் நிலையை அடையும் வரை தயம்மம் செய்ய வேண்டும். ஏனெனில் வுழு செய்வதில் வரிசைக் கிரமம் கடமையகும். எனவே ஒரு உறுப்பை கழுவிக் கொள்ளாத வரை இன்னும் அந்த உறுப்பின் காயமடைந்த பகுதியில் தயம்மம் செய்யாத வரை மற்றொரு உறுப்பின் பக்கம் முன்னேற வேண்டாம். எனவே, கையில் காயம் இருந்தால், முகத்தை கழுவிய பின், தலையை மஸ்ஹு செய்வதற்கு முன் தயம்மம் செய்துக் கொள்ள வேண்டும். இன்னும் முகத்தில் ஒரு காயம் இருந்தால், முழங்கைகள் உட்பட கைகளை கழுவும் முன் தயம்மம் செய்துக்கொள்ள வேண்டும். ஒரே உறுப்பின் காயமடைந்த பகுதியை தயம்மம் செய்வதோ, அல்லது காயமில்லாத மற்ற பகுதியை கழுவுவதோ, எதை வேண்டுமானாலும் முதலில் செய்துக் கொள்ளலாம். இருப்பினும், முதலில் தயம்மம் செய்வதும், பிறகு உறுப்பின் காயமில்லாத பகுதியை கழுவுவதும் முஸ்தஹப் (விரும்பத்தக்கது) ஆகும். [36]

## வுழுவில் மருதாணி போன்றவற்றின் மஸ்அலாக்கள்

❈ ஏதேனும் ஒரு உறுப்பு மீது மெழுகு, பிசைந்த மாவு, மருதாணி அல்லது அது போன்ற ஏதாவது ஒட்டிக் கொண்டு இருந்தால், அது தண்ணீரை அதற்கு கீழே உள்ள சருமத்தின் மீது சென்றடைவதைத் தடுக்கும். எனவே ஒட்டிக் கொண்டு இருக்கும் வஸ்து அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருந்தாலும் சரி, அதை சுத்தம் செய்யாமல் வுழு மற்றும் குளிப்பு பூரணம் ஆகாது.

❈ கைகள் ஆகியவற்றில் மருதாணியின் அடையாளமும் நிறமும் மட்டுமே இருக்கும் பொழுது, அல்லது எண்ணெயின் தாக்கம் இருக்கும் பொழுது, வுழு செய்யப்படும் உறுப்பின் சருமத்தின் மீது தண்ணீர் நேரடியாக பட்டு, அதன் மீது தேங்கி நிற்காமல் பாய்ந்து செல்கிறது என்றால் வுழு மற்றும் குளிப்பு பூரணம் ஆகிவிடும். [37]

## உறுப்பின் மீது தண்ணீரையே மாற்றக்கூடிய பொருள் இருந்தால்...

வுழு செய்ய வேண்டிய உறுப்புகளில் ஏதேனும் உறுப்பின் மீது குங்குமப்பூ, சோப்பு போன்றவை தண்ணீரையே மாற்றும் அளவிற்கு இருந்து அதனால் தண்ணீரை எந்த நிபந்தனையும் இன்றி தண்ணீர்



www.dawateislami.net

என அழைக்க முடியாதென்றால் அந்த தண்ணீரின் உபயோகத்தால் வுழு பூரணம் ஆகாது. [38]

## மர்மஸ்தானத்தைக் காண்பதால் வுழு முறிந்து விடுமா?

முழங்கால்கள் ஆடை விலகி திறந்துக் கொண்டாலோ அல்லது தன்னுடைய மர்மஸ்தானத்தை அல்லது மற்றவர்களின் மர்மஸ்தானத்தை காண்பதாலோ வுழு முறிந்து விடும் என்று பொது மக்களிடையே ஒரு கருத்து பிரபலமாக இருக்கிறது. இது முற்றிலும் தவறானதாகும். ஆம், எந்த தேவையும் இன்றி மர்மஸ்தானத்தை தனிமையில் இருந்தாலும் திறந்து கொள்ளக் கூடாது. ஏனெனில் “தனிமையிலும் எந்த தேவையும் இன்றி மர்மஸ்தானத்தை திறந்து கொள்வது ஹராமாகும்.” [39]

## குளிக்கும்போது செய்யும் வுழு போதுமானது

❋ வுழு இல்லாமல் இருக்கும் ஒருவருக்கு குளிப்பு கடமையாக இருந்தால் இன்னும் அவர் “ஜனாபத்” எனும் பெருந்தொடக்கை நீக்குவதற்கான நிய்யத்துடன் குளித்தால் வுழுவும் கூடிவிடும். [40]

❋ வுழு செய்ய வேண்டிய உறுப்புக்களில் ஏதேனும் ஒரு உறுப்பை கழுவிய பின், வுழுவை முறிக்கக்கூடிய ஏதேனும் விடயம் ஏற்பட்டால், மீண்டும் வுழுவின் நிய்யத்தோடு வரிசை முறைப்படி வுழு செய்ய வேண்டும். [41]

## பெண்ணைத் தொடுவதினால் வுழு முறியும் மஸ்அலாக்கள்

❋ இரண்டு பெரியவர்களான அந்நிய, ஆண், பெண் ஆகியவர்களின் சருமங்கள் ஒன்றையொன்று தொட்டு விட்டால், அது காமமாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், வேண்டுமென்றே நிகழ்ந்தாலும் அல்லது எதிர்பாராமல் நிகழ்ந்தாலும் இருவருடைய வுழுவும் முறிந்து விடும்.

❋ வம்ச பரம்பரை உறவு, தாய்ப்பால்குடி உறவு அல்லது திருமணத்தால் ஒன்றுபட்ட உறவு ஆகியவற்றின் அடிப்படையில் மஹ்ரமாக இருப்பவரைத் தொடுவதின் மூலம் வுழு முறிவதில்லை.

❋ தூய்மையான இயல்பு கொண்டவரின் பார்வையில் பொதுவாக காமத்தை எட்டாத நிலையில் ஒரு சிறுமியை தொடுவதால் வுழு முறியாது.

❋ சருமத்தைத் தவிர வேறு எந்தப் பகுதியும், அதாவது முடி, பற்கள், நகங்கள் மற்றும் கண்ணின் உள் பகுதி ஆகியவை, மேலும் இரண்டு ஆண்கள் அல்லது இரண்டு பெண்களின் சருமங்கள் ஒன்றையொன்று தொடுவதின் மூலமும் வுழு முறியாது.



www.dawateislami.net

❈ தொடுவதற்கு ஏதேனும் ஒன்று தடுப்பாக இருந்தால், அது மெல்லியதாக இருந்த போதிலும் வுழு முறியாது. [42]

## வுழுவில் சந்தேகம் உண்டாக்கும் 3 விதிகள்

❈ வுழு செய்துக் கொண்டிருக்கும் போது ஏதேனும் ஒரு உறுப்பைக் கழுவியதில் ஏதேனும் சந்தேகம் உண்டாகிவிட்டால், அந்த உறுப்பை மீண்டும் கழுவிய பின்னர், அதற்குப் பிறகு கழுவ வேண்டிய மற்ற உறுப்புகளையும் கழுவ வேண்டும், ஏனெனில் வுழு செய்யும் போது வரிசைக் கிரமத்தை பேணுவது ஃபர்ளு எனும் கடமையாகும்.

❈ வுழு செய்துக் கொண்ட பிறகு ஏதேனும் ஒரு உறுப்பை கழுவுவதில் சந்தேகம் உண்டானால், எதுவும் கட்டாயம் இல்லை. [43]

❈ ஒருவருக்கு வுழு செய்தது (நிச்சயமாகத் தெரியும் ஆனால் வுழு முறிந்ததின் மீது சந்தேகமாக இருக்கிறது என்றால் அவர் வுழுவோடு இருக்கிறார்) அல்லது வுழு முறிந்தது நிச்சயமாகத் தெரியும் இன்னும் அவர் மீண்டும் வுழு செய்ய வேண்டும் என்பதில் சந்தேகம் இருந்தால் (அவர் வுழு இல்லாமல் இருக்கிறார், ஆகவே இரண்டு நிலையிலும்) அவருக்கு எது நிச்சயம் என்று படுகிறதோ அவர் அதன் பிரகாரம் அமல் செய்யட்டும். [44]

## மர்மஸ்தானத்தைக் தொடுவதால் வுழு முறிந்து விடுமா?

❈ உள்ளங்கையின் உட்புறத்தால் தன்னுடைய அல்லது மற்றொருவருடைய மர்மஸ்தானத்தைக் தொட்டு விட்டாலோ, வேண்டுமென்றே தொட்டாலோ அல்லது தெரியாமல் தொட்டு விட்டாலோ, முன்பக்கத்தில் உள்ள மர்மஸ்தானமோ அல்லது பின் பக்கத்தில் உள்ளதோ, ஆரோக்கியமானவருடையதோ அல்லது பக்கவாதத்தால் முடங்கிப்போனவருடையதோ, உடலுடன் சேர்ந்திருப்பதோ அல்லது துண்டாகிப் பிரிந்து விட்டதோ, மரணித்த மைய்யத்துடையதோ, அல்லது சிறிய குழந்தையுடையதோ, காமம் இல்லாமல் தொட்டு விட்டாலும், எல்லா நிலைகளிலும் தொட்டவருடைய வுழு முறிந்து விடும்.

❈ தொப்புள் கீழ் வளரும் முடியையோ, விரைப் பைகளுக்கும், புட்டங்களுக்கும் இடைப்பட்ட, நிற்கும் நிலையில் ஒன்றிணையாத அந்த உட்புற பகுதியையோ தொட்டுவிட்டால் வுழு முறியாது.

❈ விரல்களின் நுனிகளோ, அவற்றின் இடைப்பட்ட பகுதிகளாலோ, விளிம்புகளாலோ இன்னும் உள்ளங்கையின் விளிம்பு பகுதியாலோ மர்மஸ்தானத்தைக் தொட்டு விட்டால் வுழு முறியாது. [45]



www.dawateislami.net

## தூங்குவதால் வுழு முறியுமா அல்லது முறியாதா என்பதன் விளக்கம்

❈ தூக்கத்தால் வுழு முறிந்து விடும் ஆனால் புட்டங்கள் தரையிலோ அல்லது ஒரு விலங்கின் முதுகு இன்னும் அது போன்றவற்றில் பொருந்தியிருக்கும் நிலையில் உறங்கினால் வுழு முறியாது.

❈ தூங்கிய போது புட்டங்கள் ஒரு இடத்தில் நன்றாக பொருந்தி இருந்தன, ஆனால், விழித்துக் கொள்ளும் முன் அவற்றில் ஒன்று அதன் இடத்தில் இருந்து நகர்ந்து விட்டிருந்தால் வுழு முறிந்து விட்டது.

❈ முதுகின் மீது மல்லாந்து தூங்கிய போது புட்டங்கள் தரையோடு சேர்ந்திருந்தாலும் வுழு முறிந்து விடும்.

❈ வெறும் தூக்கக் கலக்கம் அல்லது அரைத்தூக்க நிலையால் வுழு முறியாது. இதன் அடையாளம் என்னவென்றால், அங்குள்ளவர்களின் பேச்சுக் குரல் கேட்கிறது ஆனால், என்ன பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்பது புரியவில்லை.

❈ தூங்கினோமா இல்லை தூக்கக் கலக்கமாக இருந்ததா, புட்டங்கள் தரையோடு சேர்ந்திருந்தனவா இல்லையா, விழித்துக் கொள்ளும் முன் ஒரு இடத்தில் நன்றாக பொருந்தி இருந்த புட்டங்கள் அதன் இடத்திலிருந்து மாறிவிட்டனவா அல்லது விழித்துக் கொண்ட பிறகு நகர்ந்ததா என்பது போன்ற சந்தேகங்களை கொண்ட நபரின் வுழு முறியவில்லை. [46]

❈ தூங்கும்போது, புட்டங்கள் தரையோடு சேர்ந்திருந்தன, ஆனால் விழித்த போது ஒரு நீதமான மனிதர், தூக்க நிலையில் இவரிடமிருந்து துர் காற்று வெளியாகி விட்டது என்று கூறினால் அவரது கூற்றை ஏற்க வேண்டி வரும். (அதாவது அவருடைய வுழு முறிந்து விட்டது.) [47]

## நபிமார்களின் வுழுவும் பாக்கியம் பொருந்திய உறக்கமும்

நபிமார்களின் عَلَيْهِمُ السَّلَام வுழு உறக்கத்தினால் முறிவதில்லை. [48] சிறப்பு: நபிமார்களின் عَلَيْهِمُ السَّلَام கண்கள் தான் உறங்குகின்றன, இதயங்கள் ஒருபோதும் உறங்குவதில்லை. [49]

❈ வுழுவை முறிக்கும் சில விடயங்கள் நபிமார்களின் عَلَيْهِمُ السَّلَام வுழுவை முறிக்கும் காரணிகள் ஆக முடியாது. ஏனெனில் இவைகள் நபிமார்கள் عَلَيْهِمُ السَّلَام மீது நிகழ்வது சாத்தியமற்ற விடயமாகும். பைத்தியம் பிடிப்பது போன்றவை. [50]

❈ நீண்ட நேரம் நீடிக்காத மயக்கம் நபிமார்கள் மற்றும் ரஸூல்மார்களின் வெளிப்படையான உடல் மீது ஏற்படலாம். ஆனால்

அவர்களுடைய பாக்கியம் பொருந்திய இதயங்கள் அந்த நிலையிலும் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருக்கின்றன. [51]

## மஸ்ஜித்களின் வுழு கூடங்கள்

மிஸ்வாக் செய்வதால் சில சமயங்களில் பற்களில் இரத்தப்போக்கு உண்டாகிறது, மஸ்ஜித்களின் வுழு கூடங்கள் பெரும்பாலும் குறைந்த ஆழத்துடன் இருப்பதன் காரணமாக வாய் கொப்பளித்து உமிழும் போது, அதனுடைய சிதறல் ஆடை அல்லது உடலில் படுகிறது. மேலும் வீட்டின் குளியலறையின் கடினமான தரையில் வுழு செய்யும் போதும் அதைவிட அதிகமாக சிதறல் நம் மீது படுகிறது.

## வீட்டில் வுழு செய்யும் கூடங்களை உருவாக்குங்கள்

தற்காலத்தில், நின்றபடியே, பேசினில் (கை கழுவும் சிறுந்தொட்டி) வுழு செய்யும், சுன்னத்திற்கு எதிரான பழக்கம் உண்டாகி விட்டது. வருத்தமாக இருக்கிறது! மக்கள், ஆடம்பரங்கள் நிறைந்த பெரிய பெரிய மாளிகைகளை கட்டுகிறார்கள், ஆனால் அதில் வுழு செய்யும் அறையை உருவாக்குவதில்லை! சுன்னத்துக்களின் மீது வாஞ்சைக் கொண்ட இஸ்லாமிய சகோதரர்களிடம், பணிவான மதனி விண்ணப்பம், முடிந்தால், உங்கள் வீட்டில் குறைந்த பட்சம் ஒரு குழாய் கொண்ட வுழு செய்யும் இடத்தையாவது உருவாக்குங்கள். இதில் குழாயிலிருந்து தண்ணீர் நேரடியாக தரையில் விழுவதற்கு பதிலாக சாய்வான கால்வாயில் விழ வேண்டும், இல்லையெனில் பற்களில் இரத்தம் போன்றது வெளியே வரும் நிலையில் உடல் அல்லது துணிகளில் அதனுடைய சிதறல்கள் தெறிக்கும் பிரச்சினை இருக்கும். நீங்கள் ஒரு சிறந்த பத்திரமான வுழு செய்யும் இடத்தை உருவாக்க விரும்பினால், இந்த சிறுநூலின் பின்புறத்தில் உள்ள வரைபடத்திலிருந்து வழிகாட்டுதலைப் பெறுங்கள்.

❋ டபுள்யூஸீ (W.C.) இல், தண்ணீரால் இஸ்தின்ஜா செய்யும் போது, இதனுடைய சிதறல்கள் சாதரணமாக இரு கால்களின் கணுக்கால் நோக்கி தெறிக்கிறது, ஆகவே இஸ்தின்ஜா முடிந்தபிறகு, பேணுதலுக்காக கால்களின் இந்த பாகங்களை கழுவ வேண்டும்.

## வுழு செய்யும் அறையை உருவாக்கும் முறை

வீட்டில் அமைக்கப்படும் ஒரு குழாய் கொண்ட வுழு செய்யும் இடத்தின் மொத்த நீளம் 42.5 அங்குல நீளமும், 48.75 அங்குல அகலமும் கொண்டதாகவும், தரையில் இருந்து 13.75 அங்குல உயரத்தில் இருக்க வேண்டும். அதற்கும் மேலே மற்றொரு 7.5 அங்குல உயரத்தில், 32.5 அங்குல அகலம் கொண்ட இருக்கை ஒரு முனையிலிருந்து மற்றொரு முனை வரை படிகட்டைப் போன்ற வடிவத்தில் அமைக்க வேண்டும். முன் பக்க சுவருக்கும் இந்த இருக்கைக்கும் இடையிலான தூரம் 25 அங்குலம் இருக்க வேண்டும். முன் பக்கத்தில் இருந்து கால்வாய்க்கு 7.5 அங்குலங்களுக்கு மிகாமல் சாய்மானத்தை உருவாக்க வேண்டும். கால்கள் வைக்கும் இடத்தின் நீளம் பாதங்களின் நீளத்தை விட சற்றே பெரிதாக இருக்க வேண்டும், உதாரணத்திற்கு 11.25 அங்குல நீளம்



www.dawateislami.net

இருக்கலாம். இந்த இடத்தின் முன் பகுதி 4.5 அங்குலம் அகலத்திற்கு (குறிப்பாக குளிர்காலத்தில்) அசுத்தங்கள் நீங்கும் படி கால்களைத் நன்றாக தேய்த்துக் கழுவுவிக்கொள்வதற்கு ஏற்றபடி சொரசொரப்பானதாக அமைக்க வேண்டும். L (எல்) அல்லது U (யூ) வடிவம் கொண்ட மிக்ஸ்சர் குழாயை (கலவை குழாயை) தரையிலிருந்து 32 அங்குலம் உயரத்தில், குழாயின் நீரோடை சாய்மானத்தில் விழும்படியாக பொருத்த வேண்டும். இதனால் பற்களில் இருந்து கசியும் இரத்தம் மற்றும் பிற அசுத்தங்கள் நம் மீது தெறிக்காமல் தவிர்த்துக் கொள்ள எளிதாக இருக்கும். தேவைப்பட்டால் மாற்றங்கள் செய்து இதே பாணியில் மஸ்ஜித்களிலும் இது போன்ற வுழு கூடங்களை அமைத்துக் கொள்ளலாம்.

குறிப்பு: நீங்கள் டைல்ஸ் ஓடுகளை நிறுவ விரும்பினால், சாய்வில் குறைந்தபட்சம் வெள்ளை வண்ண டைல்ஸ் ஓடுகளை பயன்படுத்த வேண்டும். இதனால் மிஸ்வாக் செய்து பல் துலக்கும் போது உங்கள் பற்களிலிருந்து இரத்தம் வந்தால், அதை உங்கள் உமிழ்நீர் போன்றவற்றில் காணலாம்.

## “یارسولِ خدا” எனும் உருது வார்த்தைகளின் 9 எழுத்துகள் தொடர்பில் வுழு கூடத்தின் 9 மதனி மலர்கள்

﴾1﴿ முடிந்தால், இந்த சிறுநூலின் பின்புறத்தில் உள்ள வரைபடத்திலிருந்து வழிகாட்டுதல் பெற்று உங்கள் வீட்டில் ஒரு வுழு செய்யும் இடத்தை உருவாக்குங்கள்.

﴾2﴿ (கட்டிடக் கலைஞரின் ஆதாரங்களை செவிமெடுக்காமல்) கொடுக்கப்பட்ட வரைபடத்தின்படி அமைக்கப்பட்ட வுழு செய்யும் இடத்தில் கால் வைக்கும் தளத்தின் சாய்வை இரண்டு அங்குலம் வைத்துக் கொள்ளுங்கள்.

﴾3﴿ ஒன்றுக்கு மேற்பட்ட குழாய் நிறுவப்பட வேண்டுமானால், இரண்டு குழாய்களின் இடையே 25 அங்குல தூரத்தை வைத்துக் கொள்ளுங்கள்.

﴾4﴿ வுழு செய்யும் அறையின் குழாயில் தேவைக்கேற்ப ஒரு துணி அல்லது பிளாஸ்டிக் நிப்பிளைப் பொருத்திக் கொள்ளுங்கள்.

﴾5﴿ குழாய்கள் சுவரின் வெளிப்புறத்தில் இணைக்கப்பட்டிருந்தால், இருக்கையை ஒன்று அல்லது இரண்டு அங்குல தூரத்தில் அமைத்துக் கொள்ளுங்கள்.

﴾6﴿ தற்காலிகமான கட்டமைப்பு வேலையைச் செய்து, அதன் மீது ஒன்று அல்லது இரண்டு முறை அமர்ந்து வுழு செய்து, நல்லபடியாக பார்த்துக் கொண்ட பிறகு அதை நிரந்தரமாக்குவது நல்லது.

﴾7﴿ வுழு செய்யும் இடம் அல்லது குளியலறை போன்றவற்றின் தரையில் டைல்ஸ் ஓடுகளை நிறுவ விரும்பினால், வழுக்கும் அபாயத்தை தவிர்க்க



www.dawateislami.net

வழுக்கு எதிர்ப்பு ஓடுகளைப் (Slip resistance tiles) பயன்படுத்துங்கள்.

﴾8﴿ கால்கள் வைக்கும் இடத்தின் விளிம்பில் மற்றும் அதன் சாய்வில் குறைந்தது இரண்டு அங்குலங்கள் கொண்ட பகுதியில் டைல்ஸ் நிறுவாமல் அந்த பகுதியை சிமெண்டால் கரடுமுரடாகவும், வட்டமாகவும் அமைத்துக் கொள்ளுங்கள். இதனால் கால்களை நன்றாக தேய்த்துக் கழுவிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

﴾9﴿ சமயலறை, குளியலறை, கழிப்பறையின் தளம், திறந்தவெளி முற்றம், மஸ்ஜிதின் வுழு செய்யும் இடம் இன்னும் எங்கெல்லாம் தண்ணீர் பாய்வதற்கான தேவையுள்ள பகுதிகளுடைய தரையின் சாய்வு, கட்டிடக் கலைஞர் சொல்லும் அளவை விட ஒன்றரை மடங்கு, (உதாரணத்திற்கு, அவர் இரண்டு அங்குல என்று சொன்னால் நீங்கள், மூன்று அங்குலங்கள்), வைக்க வேண்டும். கட்டிடக் கலைஞர், "கவலைப்படாதீர், ஒரு சொட்டு தண்ணீர் கூட நிற்காது" என்றுதான் கூறுவார். நீங்கள் அவருடைய பேச்சில் சிக்கிக் கொண்டால், சாய்மான சரிவு சீராக அமையாது. பிறகு பெரும்பாலும் தண்ணீர் ஆங்காங்கே தரையில் தேங்கி நிற்கும். ஆகையால், நீங்கள் அவருடைய பேச்சை பொருட்படுத்தாமல் இருந்தால், اِنْ شَآءَ الله அதன் நன்மையை நீங்களே கண்கூடாகப் பார்ப்பீர்கள்.

## வுழு நிலைத்து இருக்காதவர்களுக்கான 9 விதிகள்

ஒருவருக்கு வுழுவை முறித்துவிடக்கூடிய நோய் இருந்தால், உதாரணமாக சிறுநீர் சொட்டுகள் வருகின்றன இன்னும் அவருக்கு, தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு தொழுவதற்கு போதிய நேரம் கிடைக்காதவர் "தாஇமுல் ஹதஸ்" ஆவார். இவருக்கு வுழு மற்றும் தொழுகை சம்பந்தமான சில சிறப்பு விதிகள் உள்ளன. அவை, ஆரோக்கியமான மக்களின் விதிகளிலிருந்து வேறுபட்டவையாகும்.

﴾1﴿ அசுத்தங்களை அகற்ற வேண்டும்.

﴾2﴿ மர்மஸ்தானத்தின் மீது பஞ்சு அல்லது அது போன்ற ஏதேனும் ஒன்றை வைத்து கட்டிக்கொள்ள வேண்டும். இதனால் அசுத்தம் முற்றிலுமாக நீக்கப்படும் அல்லது ஓரளவு குறையும்.

﴾3﴿ பிறகு, வுழு செய்யும் அல்லது தொழுகை போன்ற இபாத்ததுகளின் நிய்யத்தோடு வுழு செய்துக்கொள்வது, அவை வுழு இல்லாத நிலையில் சீராவதில்லை. எனவே இவருக்கு ஹதஸ்களை (அசுத்தங்களை) அகற்றவோ அல்லது தூய்மை அடையும் நிய்யத் செய்துக் கொள்வது சரியல்ல. ஏனெனில் ஹதஸ் எனும் அசுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மேலும் மர்மஸ்தானத்தில் இருந்து அசுத்தத்தின் வெளியேற்றம் நிற்காத வரை ஹதஸ் எனும் அசுத்தம் விலகாது.

﴾4﴿ இந்த காரியங்கள் அனைத்தும் (அதாவது, அசுத்தங்களை அகற்றுவது, மர்மஸ்தானத்தின் மீது பஞ்சு வைத்து கட்டுவது மற்றும் வுழு செய்வது) தொழுகையின் நேரம் தொடங்கிய பிறகு செய்ய வேண்டும். இவற்றில் ஏதாவது நேரத்திற்கு முன்பே செய்துவிட்டால், ஷரீஅத்தின் படி அதன் மீது நம்பிக்கை கொள்ள முடியாது. தொழுகையின் நேரம் தொடங்கிய பிறகு அவற்றை மீண்டும் செய்ய வேண்டும், இல்லையெனில் தொழுகை கூடிவராது.

﴾5﴿ “தாஇமுல் ஹதஸ்” அதாவது நிரந்தர ஹதஸ் கொண்டவருக்கு மேற்கூறப்பட்ட காரியங்களை ஒன்றன் பின் ஒன்றாக செய்வதும் ஃபர்ளு ஆகும். இதனால் முடிந்தவரை ஹதஸ் எனும் அசுத்தங்கள் குறைந்துவிடும்.

﴾6﴿ இதற்காக வுழு செய்த உடனே விரைவாக தொழுகை முடித்துக் கொள்ள வேண்டியது அவசியம். தாமதம் மற்றும் தாமதத்திற்கான காரணம் தொழுகை சம்பந்தப்பட்டதாக அல்லாமல் மற்றவையாக அதாவது உதாரணத்திற்கு உணவு உண்பது போன்றவையாக இருந்தால் அனைத்து காரியங்களும் மீண்டும் செய்ய வேண்டி வரும். கட்டிக்கொண்ட கட்டு அதன் இடத்தில் நிலையாக இருந்தாலும், மேலும் அதில் எந்த அசுத்தமும் தோன்றாமல் இருந்தாலும் சரியே, அதான் (பாங்கு) சொல்லும் பொழுது அதற்கு பதில் கூறுவது, கிப்லாவைத்தேடி அதை முன்னோக்குவது, சரியான உடைகளை அணிந்து உடலை மறைப்பது, ஜமாஅத்திற்காக எதிர்பார்த்துக் காத்திருப்பது, போன்ற தொழுகை சம்பந்தப்பட்ட காரியங்களால் தாமதங்கள் உண்டாகி இருந்தால் தவறில்லை.

﴾7﴿ “தாஇமுல் ஹதஸ்” அதாவது நிரந்தர ஹதஸ் கொண்டவர் ஒவ்வொரு ஃபர்ளுக்கும் தனித்தனியாக இந்த காரியங்களை செய்வது கட்டாயமாகும். இவருக்கு ஒரு வுழு செய்தால் அதில் இரண்டு ஃபர்ளு தொழுவதற்கு அனுமதி இல்லை. ஆனால் ஒரு ஃபர்ளுடன் நஃபில் தொழுகைகள் எத்தனை வேண்டுமானாலும் தொழலாம். [52]

﴾8﴿ அமர்ந்து தொழுவதின் மூலம் ஹதஸ் நின்றுவிடுமானால் அமர்ந்து தொழுவது கட்டாயமாகும், மேலும் இந்த நிலமையில் நிறைவேற்றிய தொழுகைகளை மீண்டும் தொழ வேண்டிய அவசியமில்லை. [53]

﴾9﴿ காயம் உண்டானவர், இன்னும் அந்த காயத்திலிருந்து தொடர்ந்து இரத்தப்போக்கு ஏற்பட்டால், ஒவ்வொரு ஃபர்ளு தொழுகைக்கும் அவர் காயத்தைக் கழுவியபின் கட்டு கட்டிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் வுழு செய்யத் தேவையில்லை. [54]



www.dawateislami.net

## ஐந்து வெவ்வேறு விதிகள்

﴾1﴿ விந்தைத் தவிர சிறுநீர், மலம், காற்று, புழு, கற்கள் போன்றவை ஏதேனும் முன்புறத்திலிருந்தோ அல்லது பின்புறத்திலிருந்தோ வெளியே வந்தால், வுழு முறிந்து விடுகிறது.

﴾2﴿ மைய்யத்தின் (சடலத்தின்) உடலில் இருந்து ஏதாவது வெளியேறினால் அதன் தூய்மை முடிந்துவிடாது, ஆனால், அதிலிருந்து அசுத்தத்தை அகற்ற வேண்டியது கட்டாயமாகும்.

﴾3﴿ போதை, பைத்தியம், மயக்கம் அல்லது தூக்கம் ஆகியவற்றால் புத்தி தடுமாறியதன் காரணமாக வுழு முறிந்து விடுகிறது. இருப்பினும், புட்டங்கள் நன்றாக பொருந்தி இருக்க உறங்கினால் வுழு முறிந்து விடாது. [55]

﴾4﴿ வாந்தி, "ஃபஸ்த்" (நரம்பைத் திறந்து கெட்ட இரத்தத்தை அகற்றும் செயல்முறை), மூக்கிலிருந்து இரத்தம் வடிவது, தொழுகையில் ஆரவாரமாக சிரிப்பது மற்றும் ஒட்டக இறைச்சி சாப்பிடுவது ஆகியவற்றால் வுழு முறியாது. [56]

﴾5﴿ "பன்றி" என்று அதன் பெயரை சொல்லுவதாலேயே வுழு முறிந்து விடுகிறது, என்று சிலர் கூறுகிறார்கள், இது தவறாகும்.

## வுழு செய்யாமல் புனித குர்ஆனைத் தொடுவது ஹராம் ஆகும்

﴾1﴿ வுழு செய்யாமல் தொழுவது, குர்ஆன் ஓதிய ஸஜ்தா செய்வது, நன்றி செலுத்த ஸஜ்தா செய்வது, தவாஃப் செய்வது, புனித குர்ஆனை எடுப்பது, அதன் பக்கங்களையும் மற்றும் பாகங்களையும் தொடுவது, அது வைக்கப்பட்டிருக்கும் மாடத்தையோ அல்லது புனித குர்ஆனை மட்டுமே வைப்பதற்காக உள்ள பெட்டியையோ தொடுவது, கற்பிப்பதற்கோ அல்லது ஓதுவதற்கோ குர்ஆன் வசனத்தின் ஒரு பகுதி கூட எழுதப்பட்டு இருந்தாலும் அதை தொடுவதும் எடுப்பதும் ஹராம் ஆகும்.

﴾2﴿ அதுவே கற்பிக்கும் அல்லது ஓதும் நோக்கத்துடன் எழுதப்படாமல் தாயத்துகளுக்காக (இஸ்ம்) எழுதப்பட்டது போன்றவற்றை, வுழு செய்யாமல் தொடுவதற்கும் எடுப்பதற்கும் அனுமதி உண்டு.

﴾3﴿ வுழு இல்லாத ஒருவர் குர்ஆனின் பக்கங்களை ஒரு மர குச்சியால் திருப்பலாம்.

﴾4﴿ குர்ஆனை விட, குர்ஆனை பற்றிய விளக்கம் அதிகமாக உள்ள நூலை வுழு இல்லாமல் தொடுவதும், எடுப்பதும் மக்ரூஹ் ஆகும். [57]



www.dawateislami.net

﴾5﴿ திருக்குர்ஆனைக் வுழு இல்லாமல் ஓதுவதற்கு அனுமதி உண்டு, ஆனால் வுழுவுடன் ஓதுவது சிறந்தது. [58]

## வுழு செய்யும்பொழுது தண்ணீரை வீணாக்குவது

தற்காலத்தில், பெரும்பாலான மக்கள் வுழு செய்யும் போது குழாய் நீரை அதிகமாக திறந்து தண்ணீரை ஓடவிடுகிறார்கள். இன்னும் சிலர் வுழு செய்யும் இடத்திற்கு வந்தவுடனேயே குழாயைத் திறந்து விடுகிறார்கள், இதற்கு பிறகு தான் முழுக்கை சட்டையின் கையை மடக்குகிறார்கள், இது வரைக்கும், அல்லாஹ் காப்பற்ற வேண்டும், தண்ணீர் வீணாகிக் கொண்டே இருக்கிறது. இதேபோல், பெரும்பாலானவர்கள், மஸ்ஹு செய்யும் போது, குழாய்களை திறந்த நிலையில் விட்டுவிடுகிறார்கள்! நாம் அனைவரும் அல்லாஹ்விற்கு பயந்து வீண்விரயத்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மறுமை நாளில், ஒவ்வொரு துகளுக்கும், ஒவ்வொரு துளிக்கும் கணக்கு கேட்கப்படும். வீண்விரயத்தைக் கண்டிக்கும் நான்கு ஹதீஸ்களைக் கேட்டு இறைவனின் பயத்தால் நடுங்குங்கள்.

## (1) பாய்ந்தோடும் அருவியிலும் வீண்விரயம்

அல்லாஹ்வின் புனித நபி صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஹழ்ரத் சஃத் رَضِیَ اللّٰهُ عَنْهُ அவர்களைக் கடந்து சென்றபோது, அவர்கள் வுழு செய்துக் கொண்டிருந்தார்கள். அண்ணலவர்கள் கேட்டார்கள்: "இந்த வீண் விரயம் எப்படி?" அதற்கு அவர்கள் வினவினார்கள்: வுழுவில் ஏதேனும் வீண் விரயம் உண்டா? அதற்கு அன்னவர்கள் கூறினார்கள்: ஆம்! நீங்கள் பாய்ந்தோடும் அருவியில் இருந்தாலும் கூட." [59]

## அஃலா ஹழ்ரத் அவர்களின் ஃபத்வா

என்னுடைய தலைவர் அஃலா ஹழ்ரத் رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்கள், இந்த புனித ஹதீஸைப் பற்றி கூறுகிறார்கள்: இந்த ஹதீஸ் பாய்ந்தோடும் அருவியில் கூட வீண்விரயத்தை நிரூபிக்கிறது. மற்றும் ஷரீஅத்தில் வீண்விரயம் கண்டனத்துக்குரியது. திருகுர்ஆனின் வசனம்:

وَلَا تُسْرِفُوْا اِنَّهٗ لَا یُحِبُّ الْمُسْرِفِیْنَ

(பாகம் 8, சூரதுல் அன்ஆம், வசனம் 141)

(தர்ஜுமா கன்ஸுல் ஈமான்: வீண் விரயமாக செலவழிக்காதீர்கள்; நிச்சயமாக வீண் விரயமாக செலவு செய்பவர்களை அவன் விரும்புவதில்லை.)

இதன் சம்பந்தமாக இருப்பதால், இந்த வீண் விரயம் கண்டிக்கப்பட வேண்டியதல்லாமல் தடை செய்ய வேண்டிய விடயமாக இருக்கிறது. மாறாக வுழுவில் வீண் விரயம் என்ற தடை இன்னும் உண்மையான பயனுள்ள தடையாக உண்டாகவில்லை.



www.dawateislami.net

முஸ்தஃபா صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: "வெள்ளிக்கிழமை அன்று என் மீது அதிகமாக ஸலவாத் ஓதுங்கள் நீங்கள் ஓதும் ஸலவாத்துக்கள் என்னிடம் சமர்ப்பிக்கப்படுகிறது." (தபரானி)

(அதாவது வுழுவில் வீண் விரயத்தின் மீது தடை என்பது விதியாக உள்ளது. உண்மையில், தடை ஹராமாக இருப்பதென்பது பயனுள்ள நன்மையைத் தருகிறது.) [60]

## (2) வீண் விரயம் செய்யாதீர்

ஹழ்ரத் அப்துல்லா பின் உமர் رَضِیَ اللّٰهُ عَنْهُ அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் அன்புக்குரிய நேசர், நாயகம் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் ஒருவர் வுழு செய்வதை கண்டு அவரை நோக்கி கூறினார்கள், "வீண் விரயம் செய்யாதீர்! வீண் விரயம் செய்யாதீர்!" [61]

## (3) வீண் விரயம் ஷைத்தானின் காரியமாகும்

ஹழ்ரத் அனஸ் رَضِیَ اللّٰهُ عَنْهُ அவர்களுடைய ரிவாயத்: வுழு செய்யும் போது அதிகமாக தண்ணீர் பயன்படுத்துவதில் எந்த நன்மையும் இல்லை மேலும் அந்த காரியம் ஷைத்தானிடமிருந்து வந்ததாகும். [62]

## (4) சுவனத்தின் வெள்ளை அரண்மனையை கேட்கலாமா?

ஹழ்ரத் அப்துல்லா பின் முங்ஃப்பல் رَضِیَ اللّٰهُ عَنْهُ அவர்கள் தனது மகன் இவ்வாறு துஆ கேட்பதை செவிமடுத்தார்கள்: "அல்லாஹ்வே)! நான் உன்னிடம் சுவனத்தின் வலது பக்கத்தில் உள்ள அந்த வெள்ளை அரண்மனையைக் கேட்கிறேன்." அதற்கு அவர்கள், என் மகனே! அல்லாஹ்விடம் சுவனத்தைக் கேளுங்கள், இன்னும் நரகத்திலிருந்து அவனிடம் அடைக்கலம் கேளுங்கள். நாயகம் ரசூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் "இந்த உம்மத்தில் ஒரு கூட்டத்தார்கள் இருப்பார்கள், அவர்கள் வுழு செய்வதிலும் இன்னும் துஆ கேட்பதிலும் வரம்பு மீறுவார்கள்." என்று கூறுவதை நான் கேட்டிருக்கிறேன், எனக்கூறுகிறார்கள். [63]

ஹகீமுல் உம்மத் முஃப்தி அஹ்மத் யார் கான் ஹனஃபி رَحْمَةُ اللّٰهِ عَلَيْهِ அவர்கள், இந்த இந்த ஹதீஸின் கீழ் கூறுகிறார்கள்: துஆ கேட்பதில் வரம்பு மீறுவது என்பது, தேவையில்லாத ஒரு விடயத்தை தீர்மானம் செய்து அதையே கேட்பது. அவருடைய மகன் செய்தது போல். ஃபிர்தௌஸை (இது மிகவும் மகிமை வாய்ந்த சுவனம்) கேட்பது மிகவும் சிறந்ததாகும். இதில் கேட்கும் நபர் தனிப்பட்ட தீர்மானம் செய்வதில்லை மாறாக ஒரு வகையை தேர்வு செய்கிறார் மேலும் இதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. [64]

## கெடுதியை செய்தார், அநீதியை செய்தார்

ஒரு காட்டரபி ஈருலகத் தலைவர் நாயகம் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் சமூகத்தில் ஆஜராகி வுழு பற்றி விசாரித்தார்.

நாயகம் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள், அவருக்கு வுழு செய்து காட்டி, அதில் ஒவ்வொரு உறுப்பையும் மூன்று, மூன்று முறை கழுவிவிட்டு பின்னர் கூறினார்கள்: "வுழு இவ்வாறாகும், யார் அதை அளவிற்கு அதிகமாக செய்கிறாரோ அல்லது குறைவாக செய்கிறாரோ அவர் கெடுதியை செய்தார், அநீதியை செய்தார்." [65]

## நடைமுறைப்படுத்தி கற்றுக் கொள்ளுங்கள்

நாயகத்தின் நேசர்களே! இந்த தூய ஹதீஸிலிருந்து நாம் தெரிந்துக் கொள்வது என்னவென்றால், வுழுவை கற்பிக்க, கற்பிப்பவர் தானே நடைமுறைப்படுத்தி மற்றவருக்கு காட்ட வேண்டும் என்பது நாயகம் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் மூலம் நிரூபணம் ஆகிறது.

போதகர்கள் இந்த ஹதீஸின் மீது அமல் செய்தவாறு, தேவைக்கு ஏற்ப தண்ணீரை பயன்படுத்தி வீண் விரயம் இல்லாமல், உறுப்புகளை மூன்று மூன்று முறை கழுவி வுழு செய்து இஸ்லாமிய சகோதரர்களுக்கு காட்ட வேண்டும். எந்த உறுப்பையும் ஷரீஅத்தின் தேவையில்லாமல் நான்கு முறை கழுவாதபடி கவனம் கொள்ள வேண்டும். மேலும் மனமகிழ்வோடு தன்னைத் திருத்திக் கொள்ள விரும்புபவர், போதகருக்கு வுழு செய்து காண்பித்து தன்னுடைய தவறுகளை நிவர்த்தி செய்துக்கொள்ளலாம். தஃவதே இஸ்லாமியின் ஸுன்னத்துகளின் பயிற்சி தரும் மதனி காஃபிலாக்களில் நாயகம் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் நேசர்களுடைய சகவாசத்தில் இந்த மார்க்கப் பணி சிறந்த முறையில் செய்ய முடியும். சரியான முறையில் வுழு செய்ய கண்டிப்பாக, கண்டிப்பாக, கண்டிப்பாக கற்றுக்கொள்ள வேண்டும். வுழு செய்யும் முறையை ஓரிரு முறை மட்டுமே வாசிப்பதன் மூலம் சிறந்த, சரியான முறையில் வுழு செய்ய வந்து விடும் என்பது மிகவும் கடினம். அதற்காக மீண்டும் மீண்டும் பயிற்சி செய்ய வேண்டும்.

## மஸ்ஜித் மற்றும் மத்ரஸா தண்ணீரின் வீண் விரயம்

வீட்டின் தண்ணீரை விட மஸ்ஜித் மற்றும் மத்ரஸா தண்ணீரின் விதிகள் கடுமையானது. எனவே மஸ்ஜிதின் வுழு செய்யும் அறையில் கவலையின்றி தண்ணீர் கொட்டுபவர்கள் வுழு செய்வதில், கவனக்குறைவு அல்லது அறியாமையின் காரணத்தால் உறுப்புகளை தேவையின்றி மூன்று முறைக்கு மேல் கழுவுகிறார்கள். இவர்கள் இறைவனை அஞ்சி நடுங்கட்டும், மேலும் மனம் திருந்தி தௌபா செய்துக் கொள்ளட்டும். வீண் விரயத்திலிருந்து தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள முடியாதவர், தனது சொந்த உடைமையில் உதாரணத்திற்கு, தனது இல்லத்தின் தண்ணீரில் வுழு செய்துக் கொள்ளட்டும். இதன் அர்த்தம் தனது சொந்த தண்ணீரில் வீண் விரயம் செய்துக் கொள்ள எந்த தடையும் இல்லாத அனுமதி கிடைத்து விட்டது என்பதல்ல, அல்லாஹ் காப்பற்ற வேண்டும்! மாறாக தனது இல்லத்தில் நன்றாகப் பயிற்சி செய்து மார்க்க முறையில் வுழுவைக்



www.dawateislami.net

கற்றுக் கொள்ள வேண்டும்.

## வீண் விரயத்தை தவிர்க்க 4 வழிமுறைகள்

﴾1﴿ சிலர் கைக்குழியில் தண்ணீரை இவ்வாறு ஊற்றுகிறார்கள், தண்ணீர் நிரம்பி வழிகிறது. அதனால் வழிந்து கீழே விழுந்தது வீணாகி விட்டது. இந்த விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும். [66]

﴾2﴿ குவளையின் குழாய் மிதமானதாக (அதாவது நடுத்தரமானதாக) இருக்க வேண்டும். மிகவும் குறுகியதாக இருந்து தண்ணீரை மிக மெதுவாக (அதாவது தாமதமாக) கொடுப்பது போலும் இருக்கக் கூடாது. நமக்குத் தேவையானதை விட அதிக தண்ணீரை வெளிப்படுத்தும்படி அதிக அகலமானதாகவும் இருக்கக்கூடாது. இதன் வித்தியாசத்தை இவ்வாறு அறிய முடியும், அதாவது பாத்திரங்களிலிருந்து தண்ணீரை சாய்த்து வுழு செய்து பாருங்கள், தண்ணீர் நிறைய செலவாகும், இதேபோல் அதிக அகலமான குழாய் கொண்ட குவளையிலிருந்து தண்ணீர் ஊற்றுவது கூட நிறைய செலவாவதற்கு காரணமாக இருக்கும். இப்படிப்பட்ட குவளையாக இருந்தால் (அதாவது அகலமான குழாய் கொண்டது) கவனமாக இருங்கள், அதிலிருந்து குழாய் நிரம்ப ஊற்றாமல், மெலிதாக வரும்படி நிதானமாக ஊற்றுங்கள். (குழாயை (pipe) திறக்கும் போதும் இதே விடயங்களை நினைவில் கொள்ளுங்கள்.) [67]

﴾3﴿ கைகளின் மீதும் கால்களின் மீதும் குவளையின் குழாய் மூலமாக தண்ணீரை ஊற்றினால் நகங்கள் முதல் முழங்கைகள் வரை (அல்லது கால்களில்) கணுக்கால்களின் மேல் வரைக்கும் தொடர்ச்சியாக ஒவ்வொரு இடத்திலும் ஒரே முறை விழும்படி ஊற்ற வேண்டும். தண்ணீர் விழும்போது கையின் அசைவால் தாமதமாகிறது என்றால் ஒரே இடத்தில் தண்ணீர் மீண்டும் மீண்டும் விழுவதால் வீண் விரயம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. [68]

﴾4﴿ சிலர் இவ்வாறு செய்கிறார்கள், நகங்களிலிருந்து முழங்கைகள் அல்லது கணுக்கால் வரை தண்ணீர் ஊற்றுகிறார்கள், பின்னர் மீண்டும் மீண்டும் நகங்களின் பக்கம் கொண்டு செல்கிறார்கள் ஆனால் தண்ணீர் விழுவதை கையை நிறுத்தி தடுக்காமல் ஊற்றிக்கொண்டே இருந்து விடுகிறார்கள், இப்படி செய்யக் கூடாது இதனால் அந்த உறுப்பு (மூன்று முறைக்குப் பதிலாக) ஐந்து முறை கழுவியது போல் ஆகிவிடும். மாறாக, ஒவ்வொரு முறையும் முழங்கை அல்லது (கால்களின்) கணுக்கால் வரை கொண்டு வரும்போது, தண்ணீர் ஊற்றும் கையை நிறுத்தி, நிறுத்தப்பட்ட கையை நகங்கள் வரை கொண்டு சென்று, பின்னர் அங்கிருந்து தண்ணீரை ஊற்ற வேண்டும். இது தான் ஸுன்னத்தான முறையாகும். நகங்களிலிருந்து முழங்கைகள் அல்லது கணுக்கால் வரை நீர் பாய வேண்டும் இதற்கு எதிர் மாறாக அல்ல. (மாறாக,

முழங்கைகளிலிருந்து அல்லது கணுக்காளிலிருந்து நகங்களுக்கு தண்ணீரை பாய விடுவது ஸுன்னத் அல்ல). [69]

இதுவரை சொன்னதின் முழுமையான கருத்து என்னவென்றால், நேர்த்தியோடு வேலை செய்ய வேண்டும். இமாம் ஷாஃபிஈ رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் மிகவும் அழகாக கூறுகிறார்கள்: நேர்த்தியாக எடுத்தால் சிறிதளவு கூட போதுமானதாகும், இன்னும் நேர்த்தியின்மைக்கு எவ்வளவு எடுத்தாலும் போதுமானதாகாது. [70]

## "یا رب اسراف سے بچا" – "வீண் விரயத்திலிருந்து காப்பாற்று ரப்பே" எனும் இந்த உர்து வார்த்தைகளின் பதினான்கு எழுத்துகள் தொடர்பில் வீண் விரயத்தை தவிர்க்கும் 14 மதனி மலர்கள்

﴾1﴿ இன்று வரை செய்த அனுமதியற்ற வீண் விரயங்களுக்காக மனந்திருந்தி, தௌபா செய்து எதிர்காலத்தில் அவற்றைத் தவிர்க்கும் முயற்சிகளை பூரணமாக மேற்கொள்ள வேண்டும்.

﴾2﴿ கவனமாக சிந்தனை செய்து, வுழு மற்றும் குளிப்பு ஸுன்னத் பிரகாரம் அமையவும் மேலும் தண்ணீரும் குறைவாக உபயோகிக்கவும் நிலையான ஒரு முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். மறுமை நாளில் ஒவ்வொரு துகளும் மற்றும் ஒவ்வொரு துளியும் கணக்கிடப்படும் என்று உங்களை நீங்களே பயமுறுத்திக் கொள்ள வேண்டும். பாகம் 30, ஸூரா Zஸில்Zஸால் வசனம் 7 மற்றும் 8இல் அல்லாஹ் கூறுகிறான்:

فَمَنْ يَّعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَّرَهٗ ﴿۷﴾ وَمَنْ يَّعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ شَرًّا يَّرَهٗ ﴿۸﴾

தர்ஜுமா கன்Zஸுல் ஈமான்: எனவே எவர் ஒரு துகள் அளவு நன்மையைச் செய்தாலும் அதைக் காண்பார்; இன்னும் எவர் ஒரு துகள் அளவு தீமையைச் செய்தாலும் அதைக் காண்பார்.

﴾3﴿ வுழு செய்யும் போது குழாயை கவனமாக திறவுங்கள். வுழு செய்யும் சமயத்தில் முடிந்தால், ஒரு கையை குழாயின் மூடியின் மீது வைத்திருங்கள். தேவை முடிந்து விடும்போதெல்லாம் குழாயை மீண்டும் மீண்டும் மூடிக்கொண்டே இருங்கள்.

﴾4﴿ தண்ணீர் குழாயை விட குவளையின் மூலம் வுழு செய்வதால் தண்ணீர் குறைவாக செலவாகும். முடிந்தவரை குவளையைக் கொண்டே வுழு செய்யுங்கள். குழாய் இல்லாமல் வுழு செய்ய முடியாது என்றால் இப்படியும் செய்யலாம், எந்தெந்த உறுப்புகளை குவளையின் மூலம் வசதியாக கழுவ முடியுமோ அவற்றை குவளையைக் கொண்டே கழுவலாம். குழாயின் மூலம் வுழு



www.dawateislami.net

செய்வது அனுமதிக்கப்பட்டதாகும். ஆனால் எந்த விதத்திலும் வீண் விரயத்தை தவிர்த்துக் கொள்ளும் நிலையை முன்னெடுக்க வேண்டும்.

﴾5﴿ பற்களை மிஸ்வாக் செய்வது, வாய் கொப்பளிப்பது, தண்ணீரை தொண்டையில் நிறுத்தி “கர கர” என்று சத்தம் உண்டாக்கி கொப்பளிப்பது, மூக்கை சுத்தம் செய்வது, தாடி மற்றும் கை, கால் விரல்களை குடைந்து கழுவும்போது ஒரு சொட்டு தண்ணீர் கூட சொட்டி விடாதபடி, குழாயை நன்றாக மூடிவைக்கும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

﴾6﴿ குறிப்பாக குளிர்காலத்தில் வுழு அல்லது குளிப்பதற்கு மேலும் பாத்திரங்கள் மற்றும் துணிகளை கழுவுவதற்கு சூடான நீரைப் பெற குழாயைத் திறக்கும்போது, குழாயில் சேர்ந்து இருக்கும் குளிர்ந்த நீரை கீழே கொட்ட விடுவதற்கு பதிலாக அதை ஏதேனும் ஒரு பாத்திரத்தில் பிடித்து வைத்துக் கொள்ளும் முறையை கையாள வேண்டும்.

﴾7﴿ கைகள் அல்லது முகம் கழுவுவதற்கு சோப்பு நுரையை உண்டாக்க தண்ணீரை கவனமாக பயன்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு, கைகளை கழுவுவதற்கு, உள்ளங்கையில் சில சொட்டு தண்ணீர் எடுத்து, சோப்பை எடுத்து நுரையை உண்டாக்க முடியும். ஏற்கனவே கையில் சோப்பு வைத்துக் கொண்டு அதில் தண்ணீர் ஊற்றினால், அதிக தண்ணீர் செலவாக வாய்ப்பு உள்ளது.

8﴿ பயன்படுத்திய பிறகு சோப்பை, சிறிதளவு கூட தண்ணீர் இல்லாத சோப்பு டப்பாவில் வைக்க வேண்டும். தண்ணீரில் வைத்து விட்டால் சோப்பு கரைந்து வீணாகி விடும். கை கழுவும் வாஷ் பேஸினில் கூட சோப்பை வைக்கக்கூடாது, ஏனெனில் அது தண்ணீர் படுவதின் மூலம் விரைவில் கரைந்து விடும்.

﴾9﴿ குடித்து முடித்த பிறகு கிளாஸில் மீதமுள்ள தண்ணீரை வீசி விடுவதற்குப் பதிலாக, அதை வேறு ஒருவருக்கு குடிக்கக் கொடுங்கள், அல்லது வேறு எதற்காகவாவது பயன்படுத்துங்கள்.

﴾10﴿ பழம், உடை, பாத்திரம் தரை மற்றும் தேநீர் கோப்பை அல்லது ஒரு கரண்டியை கழுவும்போது கூட குழாயைத் திறந்து விட்டு தேவைக்கு அதிகமாக தண்ணீரை கொட்டுவது இப்போதெல்லாம் வழக்கம் ஆகிவிட்டது. இதை ஒரு உணர்வுபூர்வமான மற்றும் பக்தியுள்ள மனிதன் பார்த்து சகித்துக் கொள்ள முடியாது!!!

ஒரு வேளை!

நான் கூறுவது உன் மனதில் பதிந்துவிட வேண்டுமே...

﴾11﴿ பெரும்பாலான மஸ்ஜித்கள், வீடுகள், அலுவலகங்கள், கடைகள் போன்றவற்றில், வீணாக இரவும் பகலும் மின்விளக்குகள், AC, மின்விசிறிகள் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. தேவை முடிந்ததும், மின்விளக்குகள், மின்விசிறிகள், ஏசி மற்றும் கம்ப்யூட்டர்கள் ஆகியவற்றை அணைக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் அனைவரும் மறுமையின் கணக்கிற்கு பயப்பட வேண்டி இருக்கிறது, எனவே ஒவ்வொரு விடயத்திலும் வீண்விரயத்தை தவிர்க்க வேண்டும்.

﴾12﴿ கழிப்பறையில் குவளையை பயன்படுத்த வேண்டும். நீர் தெளிப்பான் (health faucet) உபயோகிப்பதால் சுத்தம் செய்ய தண்ணீர் அதிகமாக செலவாகும். மேலும் பாதங்கள் பெரும்பாலும் அசுத்தமாகி விடும். ஒவ்வொரு முறை சிறுநீர் கழித்த பிறகு ஒவ்வொருவரும் ஒரு குவளை தண்ணீர் எடுத்து W.C. யின் ஓரங்களில் சிறிது ஊற்ற வேண்டும். பிறகு சிறிது மேலே இருந்து (சிதறல்கள் மேலே தெளித்து விடாமல்) அதனுடைய பெரிய துளைக்குள் ஊற்றி விடவேண்டும். اِنْ شَآءَالله, நாற்றம், மற்றும் கிருமிகளின் விருத்தியில் குறைவு உண்டாகும். “ஃப்ளஷ் டாங்க்” மூலம் சுத்தம் செய்வதால் நிறைய தண்ணீர் செலவாகிறது.

﴾13﴿ குழாயில் இருந்து தண்ணீர் துளிகள் சொட்டிக்கொண்டே இருந்தால், உடனடியாக அதற்கான தீர்வைக் காண வேண்டும், இல்லையெனில் தண்ணீர் வீணாகிக் கொண்டே இருக்கும். சில சமயங்களில் மஸ்ஜித்களிலும், மத்ரஸாக்களிலும் குழாய்கள் சொட்டிக் கொண்டே இருக்கும், ஆனால் அதைப் பற்றி கேட்பாரற்று இருப்பார்கள். நிர்வாகத்தினர், இதனுடைய பொறுப்பை உணர்ந்து, தம்முடைய மறுமையின் நன்மைக்காக உடனடியாக ஒரு தீர்வை முன்னெடுக்க வேண்டும்.

﴾14﴿ உணவு உண்ணுவது, தேநீர் அல்லது வேறு ஏதேனும் பானத்தை அருந்துவது, பழங்களை நறுக்குவது போன்றவற்றில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு பருக்கையும், உணவின் ஒவ்வொரு துகளும், ஒவ்வொரு துளியும் பயன்படுத்தபட வேண்டும்.

## 12 மதனி மலர்களின் பூச்செண்டு

✵ வுழு செய்துக் கொண்டிருக்கும் போது ஹதஸ் (அதாவது, வுழுவை முறிக்கும் ஏதேனும் ஒரு செயல்) உண்டாகி விட்டால் அல்லது வுழுவை ஏதேனும் இயலாமையால் முழுமையாக்காமல் விட்டுவிட்டால், எந்த அளவு வுழு முழுமையாகி விட்டதோ அதற்கான நன்மை கிடைக்கும். ✵ எந்த விதமான காரணமுமின்றி வுழுவை முழுமையாக்காமல் விட்டுவிட்டால், அதுவரை எத்தனை செய்கைகள் முழுமையாக்கப்பட்டதோ அவற்றின் மீது



www.dawateislami.net

நன்மை கிடைக்காது.[71] ❋ மிகவும் சூடான அல்லது மிகவும் குளிர்ந்த நீரில் வுழு செய்வது மக்ரூஹ் தன்Zஸீஹி ஆகும், ஏனெனில் அதன் மூலம் ஒவ்வொரு உறுப்பையும் சரியாகக் கழுவ முடியாமல் போகும்.[72] ❋ யாரிடமிருந்தாவது பலப்பிரயோகம் செய்து பறிக்கப்பட்ட தண்ணீரில் வுழு செய்தால் வுழு கூடிவிடும், ஆனால் இது ஹராம் ஆகும்.[73] ❋ ஒன்றும் அறியாத குழந்தை தவாஃப் செய்ய, குழந்தையின் பாதுகாவலர் அதற்கு வுழு செய்துவிட வேண்டும்.[74] ❋ முகத்தை கழுவும்போது, முகத்துடன் தொடர்பு கொண்ட பகுதிகளின் சில பாகங்களையும் கழுவுவது வாஜிப் எனும் கட்டாயமாகும். இதே போல் கைகளையும், கால்களையும் கழுவும்போது சிறிதளவு அதிகரித்துக் கொள்ள வேண்டும்.[75] ❋ பயன்படுத்திய தண்ணீர் ஒரு இடத்தில் சேகரிக்கப்பட்டு, அது இரண்டு ''குல்'' அளவை (191 கிலோகிராம்) அடைந்தது விட்டால் அந்த தண்ணீர் சுத்திகரிக்கும் தன்மை உடையதாக ஆகிவிடுகிறது.[76] ❋ கையின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டிருந்தால், மீதமிருக்கும் பகுதியை கழுவ வேண்டியது கடமையமாகும். முழங்கைக்கு முன்பாக துண்டிக்கப் பட்டிருந்தால், முழங்கையை கழுவுவது கடமையமாகும். முழங்கைக்கு மேல் துண்டிக்கப்பட்டிருந்தால், மீதமுள்ள கை கழுவ வேண்டிய கடமையில்லை, ஆனால் கழுவுவது ஸுன்னத் ஆகும்.[77] ❋ தலையின் எல்லையை தாண்டி வளர்ந்து தொங்கும் தலைமுடியின் பின்னல் போன்றவற்றை மஸ்ஹு செய்வது போதுமானதல்ல.[78] ❋ வுழு செய்ய தொடங்கும் முன், بِسْمِ اللّٰه ஓதுவதை மறந்து விட்டால், இடையில், எப்பொழுது நினைவிற்கு வருகிறதோ بِسْمِ اللّٰهِ اَوَّلَهٗ وَ اٰخِرَهٗ என்று ஓதிக் கொள்ள வேண்டும்.[79] ❋ ஃபர்ளின் இடத்தில் இருக்கும் ஒவ்வொரு முடியையும், நகத்தையும் கழுவுவது கட்டாயமாகும். அவை நீளமாக இருந்தாலும் சரியே. இதேபோல் கொப்புளம், சிரங்கு இன்னும் அதிகப்படியான விரலைக் கழுவுவதும் கட்டாயமாகும்.[80] ❋ தன்னுடைய விரல்களைத் தவிர சொரசொரப்பான ஒரு பொருளைக் கொண்டு மிஸ்வாக் செய்வதால் கூட ஸுன்னத் நிறைவேறிவிடும். ஆனால் சிறந்தது ஒரு மரத்தின் குச்சியால் செய்வதாகும்.[81] ❋ முகத்தை கழுவும் போது, தண்ணீரை கன்னங்கள், மூக்கு அல்லது நெற்றியில் மீது வேகமாக வீசிக் கொள்ள வேண்டாம். இந்த செய்கைகள் அனைத்தும் அறிவற்ற மூடர்களுடையது ஆகும். மாறாக, நெற்றியின் மேலிருந்து முகவாயின் கீழ்வரைக்கும் பாயும்படி கன்னத்தின் அடிப்பகுதி வரை மெதுவாக ஊற்றவும்.

முஸ்தஃபாவின் நாயனே! நாம் வீண் விரயத்தில் இருந்து தவிர்ந்து, ஷரீஅத் முறைப்படி வுழு செய்யவும், இன்னும் எப்பொழுதும் வுழுவோடு இருக்கும் பாக்கியத்தையும் வழங்குவாயாக!

اٰمِـيْن بِجَاهِ النَّبِيِّ الْاَمِـيْن صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: “என்னை பற்றிய Zஸிக்ர் யாரிடம் செய்யப்பட்டு, அவர் என் மீது ஸலவாத் ஓதவில்லையென்றால், அவர் சுவனத்தின் பாதையை விட்டுவிட்டார்.” (தபரானி)

## வுழுவோடு மரணிப்பவர் உயிர் தியாகி ஆவார்

முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: “நீங்கள் எப்பொழுதும் வுழுவோடு இருக்கும் திறன் இருந்தால் அவ்வாறே செய்யுங்கள், ஏனெனில் உயிரை கைப்பற்றும் மலக்கு, எந்த அடியானின் ரூஹை வுழுவோடு இருக்கும் நிலையில் கைப்பற்றுகிறாரோ, அவருக்கு ஷஹாதத் எனும் (தியாகியின்) படித்தரம் எழுதப்படுகிறது.”

*(ஷுஅபுல் ஈமான், பாபுத் தஹாராத், 29/3, ஹதீஸ்: 2783)*

## இந்த இதழை வாசித்த பின் மற்றொருவருக்கு கொடுங்கள்

திருமண, சுகதுக்க விழாக்கள், கூட்டங்கள் மற்றும் மீலாத் ஊர்வலங்கள் போன்றவற்றில் மக்தபதுல் மதீனா வெளியிடும் இதழ்கள் மற்றும் மதனி மலர்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை விநியோகித்து நன்மைகளைப் பெறுங்கள், உங்கள் கடைகளில் வாடிக்கையாளர்களுக்கு வெகுமதியாக கொடுக்க இந்த இதழ்கள் வைத்திருப்பதை பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். மாதந்தோறும் உங்கள் குடியிருப்பில் வீடு வீடாக செய்தித்தாள் விற்பனையாளர்கள் அல்லது குழந்தைகள் மூலம் குறைந்தபட்சம் ஒரு எண்ணிக்கை ஸுன்னத்துகள் நிறைந்த இதழ் அல்லது மதனி மலர்கள் அடங்கிய சிறிய பிரசுரங்களை விநியோகித்து நன்மையின் பால் அழைக்கும் பணியை மும்முரம் ஆக்குங்கள்.

## பிரசவத்தை எளிதாக்கும் செய்முறை (மர்யம் பீபியின் மலர் [☆])

மர்யம் பீபியின் பூவை பிரசவ வலி தொடங்கிய உடன் ஒரு திறந்த பாத்திரத்தின் அல்லது ஒரு டப்பாவின் தண்ணீரில் போட்டுவிட்டால் அது ஈரமாகி நனைய நனைய மலர ஆரம்பிக்கும். அல்லாஹ்வின் கிருபையால், மர்யம் பீபியின் மலரின் பரகத்தால் குழந்தையின் பிரசவம் எளிதாகிறது.

[☆] இதை “மர்யம் மூலிகை” மற்றும் “மர்யம் கை” என்றும் கூறுகிறார்கள். இது, கையின் வடிவத்தில் உலர்ந்த நிலையில் இருக்கும். மக்கா மதீனாவில் உள்ள மளிகை (நாட்டு மருந்து) கடைகளில் கிடைக்கும். இன்னும் அங்கு உள்ளூர் பெண்கள் மற்றும் குழந்தைகள் தரையில் பொருட்களை வைத்து விற்கிறார்கள், அவர்களிடமும் இது கிடைக்கும். இதனுடைய இயல்பு மற்றும் பரகத் பற்றி நன்கு அறிந்த ரஸூலின் நேசர்கள் அங்கிருந்து கொண்டு வந்து மற்றவர்களுக்கு பரிசாக வழங்குகிறார்கள். யாருக்கு கொடுக்கிறோமோ அவருக்கு அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை விளக்குவதும் முக்கியம் ஆகும். இது சிறிதளவே பழையதாக இருந்தால் சிறந்தது.

முஸ்தஃபா صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: "என் மீது ஏராளமாக ஸலவாத் ஓதுங்கள், நிச்சயமாக என் மீது ஸலவாத் ஓதுவது உங்களுடைய தூய்மைக்கு காரணமாக அமையும்." (அபூ யஃறா)

## அறுவை சிகிச்சை இல்லாமல் பிரசவம் ஆகும் (மர்யம் பீபியின் மலரின் நன்மை)

தஃவதே இஸ்லாமியின் ஜாமிஅதுல் மதீனாவின் ஒரு ஆசிரியரான மதனி இஸ்லாமிய சகோதரர் விவரிக்கிறார், எனது இரண்டாவது குழந்தையின் பிறந்த தினத்தன்று எனது குழந்தைகளின் தாய் மருத்துவமனையின் சிறப்பு அறைக்குள் (லேபர் ரூம்) சென்று விட்டிருந்தார். சிறிது நேரத்திற்கு பின்னர், மதனி சிறுவன் பிறந்த நற்செய்தி கிடைத்தது. அப்பொழுது மருத்துவமனையின் காத்திருப்பு அறையில் ஒருவருடன் சந்திப்பு நிகழ்ந்தது. அவர் பேச்சுவாக்கில் மர்யம் பீபியின் மலரைப் பற்றி குறிப்பிட்டார். நான் மேலும் விசாரித்ததில் அவர் கூறினார், பிரசவ வலி தொடங்கிய உடன் இந்த உலர்ந்த பூவை ஒரு திறந்த பாத்திரத்தின் அல்லது ஒரு டப்பாவின் தண்ணீரில் போட்டுவிட்டால் அது ஈரமாகி நனைய நனைய மலர ஆரம்பிக்கும். மேலும் இதன் நன்மை என்னவென்றால் இது ஒரு குழந்தையின் பிரசவம் எளிதாகிறது. பின்னர், ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மூன்றாவது குழந்தை பிறக்கும் சமயம் வந்த போது பெண் மருத்துவர், என் குழந்தைகளின் தாயிடம், அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறக்க மனதளவில் தயாராக இருக்குமாறு கூறினார். எனக்கு மர்யம் பீபியின் பூ நினைவிற்கு வந்தது, உடனே நான் மளிகை (நாட்டு மருந்து) கடையில் இருந்து மர்யம் மூலிகை பெற்றுக் கொண்டேன், பிரசவ நேரம் நெருங்கியதும், அதை தண்ணீரில் போட்டுவிட்டேன். அல்லாஹ்வின் கருணையால், மதனி மகள் எந்த அறுவை சிகிச்சையும் இல்லாமல் பிறந்து விட்டாள். சிறிது காலம் கழிந்த பின்னர், நான்காவது குழந்தையின் பிரசவத்திலும் மருத்துவர் அறுவை சிகிச்சையையே உறுதிப்படுத்தினார். ஆனால் நான் மற்ற ஔராதுகளையும் இன்னும் வZஸீஃபாக்களையும் (இவை மக்தBபதுல் மதீனாவால் வெளியிடப்பட்ட "கரேலு இலாஜ் (வீட்டு வைத்தியம்)" என்ற புத்தகத்தில் உள்ளன) ஓதிக் கொண்டிருந்ததோடு மர்யம் மூலிகையையும் பயன்படுத்தினேன். இதனால், மீண்டும், மதனி மகள் எந்த அறுவை சிகிச்சையும் இல்லாமல் பிறந்தாள். இதற்கு சுமார் இரண்டு வருடங்கள் கழித்து, ஐந்தாவது குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டபோது, நாங்கள் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்றோம். அங்கேயும், மருத்துவர், அவரது சொந்த அனுபவம் மற்றும் மருத்துவ அறிக்கைகளின் பேரில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றே கூறினார். நானும் பணத்திற்கான ஏற்பாட்டை செய்து வைத்துவிட்டேன். மேலும் ஔராதுகளையும் இன்னும் வZஸீஃபாக்களையும் ஓதியதோடு, பிரசவ நேரம் நெருங்கியபோது, மர்யம் மூலிகையை தண்ணீரில் திறந்த வாய் கொண்ட டப்பாவில் தண்ணீரில் வைத்து விட்டேன். அறுவை சிகிச்சை இல்லாமல் பிரசவம் நடக்க முடிந்த அளவு முயற்சி செய்த



www.dawateislami.net

பின்னர் அறுவை சிகிச்சைக்கு பணம் கட்டுமாறு மருத்துவர் கூறி விட்டார். இப்போது அறுவை சிகிச்சையைத்தவிர வேறு வழியில்லை என்று அதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தார். பணம் வங்கியில் இருந்தது, அதனால் மருத்துவமனைக்கு அருகில் உள்ள ஏடிஎம் (ATM) இயந்திரத்திலிருந்து பணத்தை எடுத்து கவுண்டரில் கட்டி விட்டேன். ஆனால் அறுவை சிகிச்சைக்கு முன்பே, அல்லாஹ்வின் கிருபையால், ஆரோக்கியமான மற்றும் அழகான மதனி மகன் பிறந்து விட்டான் என்ற நல்ல செய்தி கிடைத்தது. நான் நான்கு அல்லது ஐந்து இஸ்லாமிய சகோதரர்களுக்கு மர்யம் மூலிகையை பயன்படுத்தும் ஆலோசனையை கூறினேன், அவர்களில் பலருக்கு மருத்துவரால் அறுவை சிகிச்சை தான் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. اَلْحَمْدُ لِلّٰه! ஆனால் அவர்கள் வீட்டிலும் அறுவை சிகிச்சை இல்லாமலேயே பிரசவங்கள் நிகழ்ந்தன.



www.dawateislami.net

# ஆதாரங்கள்


[1]...முஃஜம் கபீர், 8/69, ஹதீஸ்: 15316, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[2]...முஸ்னத் இமாம் அஹ்மத், முஸ்னத் உஸ்மான் பின் அஃப்பான், 1/190, ஹதீஸ்: 423, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[3]...மீZஸானுல் குப்ரா, கிதாBபுத் தஹாரா, 1/130, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[4]...தாரு குத்னி, கிதாBபுத் தஹாரா, BபாBப் அத்தஸ்மியா அலல் வுழு, 1/52, ஹதீஸ்: 228,229, தாருல் ஃபிக்ர் Bபேரூத்.
[5]...முஃஜம் ஸகீர், பக்கம் 168, ஹதீஸ்: 196, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[6]...கன்Zஸுல் உம்மால், கிதாBபுல் தஹாரா, முதலாம் பாகம், தொகுதி: 5, 9/123, ஹதீஸ்: 25994, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[7]...ஷுஅபுல் ஈமான், BபாBப் ஃபில் தஹாரா, 3/29, ஹதீஸ்: 2783, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[8]...முங்னில் முஹ்தாஜ், கிதாBப் அல் தஹாரா, Bபாபுல் வுழு, 1/181, தாருல் ஹதீஸ், காஹிரா (கெய்ரோ).
[9]...ஷுஅபுல் ஈமான், BபாBப் ஃபில் தஹாரா, 3/29, ஹதீஸ்: 2782.
[10]...ஃபதாவா ரZஸவிய்யா, 1/945, பாகம் ب, ரZஸா ஃபவுண்டேஷன், லாஹூர்.
[11]...முஃஜம் அவ்ஸத், 4/106, ஹதீஸ்: 5366, தாருல் ஃபிக்ர் அம்மான்.
[12]...முஸ்னத் பZஸ்ஸார், 2/75, ஹதீஸ்: 422, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[13]...இஹ்யாஉல் உலூம், கிதாBப் அஸ்ராருத் தஹாரா, BபாBப் ஆதாபெ கழாயில் ஹாஜத், 1/178, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[14]...இஹ்யாஉல் உலூம், கிதாBப் அஸ்ராருத் அத்தஹாரத், அல் கிஸ்ம் ஸானி தஹாரதில் அஹ்தாஸ்... 1/179.
[15]...ஃபத்ஹுல் முஈன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, பக்கம்: 58.
[16]...நிஹாயதுல் முராத் ஃபீ ஷரஹ் ஹிதாயா இப்னு அல் இமாத், பக்கம் 69, மக்தூதா (கையெழுத்துப் பிரதி).
[17]...தாரிமி, கிதாபுல் வுழு, BபாBப் அல் கௌல் Bபஃதல் வுழு, பக்கம்: 208, ஹதீஸ்: 720, தாருல் மஃரிபா, Bபேரூத்.
[18]...மஸாஇலுல் குர்ஆன், பக்கம்: 283, ஷப்பீர் Bபிரதர்ஸ் லாகூர்.
[19]...கன்Zஸுல் உம்மால், கிதாBபுத் தஹாரா, Bபாபுஸ் ஸானீ ஃபில் வுழு, பாகம்: 9, 9/132, ஹதீஸ்: 26085.
ஹாவி லில்ஃபதாவா, ஃபதாவா ஹதீஸியஹ், கிதாBபுத் தஹாரா, பக்கம்: 346, தாருல் கிதாBபல் அரபி, Bபேரூத்.
[20]...ஷுஅபுல் ஈமான், BபாBப் ஃபித் தஹாராத், 3/21, ஹதீஸ்: 2754.
[21]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/96–104, முலக்கஸன், தாருல் ஹதீஸ், காஹிரா (கெய்ரோ).
[22]...அல் மஜ்மூஃ ஷரஹுல் முஹZத்தப், கிதாBபுத் தஹாரா, BபாBப் ஸிஃபதுல் வுழு, 2/275, முஃபஸ்ஸலன், தாருல் ஹதீஸ், காஹிரா (கெய்ரோ).
[23]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/98–117, முலக்கஸன்.
முங்னில் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/163–181, முலக்கஸன்.
ஃபத்ஹுல் முஈன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, பக்கம்: 51–59, முலக்கஸன்.
இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, பக்கம்: 1/76–96, முலக்கஸன், தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[24]...அஸ்னல் மதாலிப், கிதாBபுத் தஹாரா, ஃபஸ்ல் ஃபீ கைஃபியதில் குஸ்ல், 1/203, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[25]...நிஹாயதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/114 1, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
[26]...மின்ஹாஜுத் தாலிபீன், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, பக்கம்: 74, தாருல் மின்ஹாஜ் Bபேரூத்.
[27]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/111–115, முலக்கஸன்.
[28]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/86.
[29]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/57, முலக்கஸன்.
[30]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, 1/48–49, முலக்கஸன்.




www.dawateislami.net

முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் கூற்று: “அல்லாஹ்வின் திக்ரை கூறாமலும், நபி மீது ஸலவாத் ஷரீஃபை கூறாமலும் தங்கள் சபையிலிருந்து எழுந்தவர்கள், துர்நாற்றத்துடன் எழுந்தார்கள்.” (ஷுஅபுல் ஈமான்)

[31]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/58, முலக்கஸன்.
அல் மன்ஹஜுல் கவீம், Bபாபு அஹ்காமுத் தஹாரா, ஃபஸ்ல் ஃபில் மாஇல் முஸ்தஅமல், பக்கம்: 13–14, முலக்கஸன், தாருல் மின்ஹாஜ் Bபேரூத்.

[32]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/51.

[33]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/55–56, முலக்கஸன்.

[34]...கன்Zஸுர் ராஙிபீன் மஅ குல்யூபி வ உமைரா, கிதாBபுத் தஹாரா, 1/28, தாருத் தௌஃபீகியா லித்துராஸ், காஹிரா (கெய்ரோ).

[35]...இஹ்யாஉல் உலூம், கிதாBப் அஸ்ராருத் தஹாரா, BபாBப் ஆதாபுல் கZழாயில் ஹாஜா, 1/181.

[36]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுத் தயம்மும், 1/155–156, முலக்கஸன்.
நிஹாயதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுத் தயம்மும், 1/283–285, முலக்கஸன்.

[37]...அல் மஜ்மூஃ ஷரஹுல் முஹZத்தப், கிதாBபுத் தஹாரா, BபாBப் ஸிஃபதுல் வுழு, 2/275, முல்தகதன்.

[38]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/61.
துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/95.

[39]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 4/468

[40]...கிஃபாயதுல் அக்யார், கிதாBபுத் தஹாரா, Bபாப் ஃபராஇலில் வுழு, பக்கம்: 40. முல்தகதன், தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.
துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுன் நஜாசா, 1/133, பதஙய்யுர் கலீல்.

[41]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/129, பதஙய்யுர் கலீல்.

[42]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/78–79, முலக்கஸன். இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/110–112, முலக்கஸன்.

[43]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/74–75, முல்தகதன்.
துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/117.

[44]...மின்ஹாஜுத் தாலிபீன், கிதாBபுத் தஹாரா, Bபாப் அஸ்பாபுல் ஹதஸ், 71/1.

[45]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாப் அஸ்பாபுல் ஹதஸ், 1/81,82, முல்தகதன்.
இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/106–110, முலக்கஸன்.

[46]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாப் அஸ்பாபுல் ஹதஸ், 1/78.
நிஹாயதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/116.

[47]...ஃபத்ஹுல் முஈன், பி ஷரஹி குர்ரதுல் அய்ன், Bபாபுஸ் ஸலா, பக்கம்: 62.

[48]...ஹாஷியாஹ் கல்யூபி அலா கன்Zஸிர் ராஙிபீன், Bபாப் அஸ்பாபுல் ஹதஸ், 1/46, தாருத் தௌஃபீகியா லித்துராஸ், காஹிரா (கெய்ரோ).

[49]...Bபுகாரி, கிதாBபுத் தௌஹீத், Bபாபு கௌலிஹி, வகல்லமல்லாஹு மூஸா தக்லீமா, பக்கம்: 1811, ஹதீஸ்: 7517, தாருல் மஃரிஃபஹ்.

[50]...ரௌழதுத் தாலிபீன், கிதாபுன் நிகாஹ், பாபு ஃபீ கஸாஇஸி ரஸூலுல்லாஹ்...5/361, தாரு ஆலமல் குதுப்.

[51]...ஹாஷியாஹ் புஜய்ரமி அலல் கதீப், கிதாBபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ சஜ்ததிஸ் ஸஹ்வி, 2/275, முல்தகதன், தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.

[52]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/63–64, முல்தகதன்.

[53]...அல் மன்ஹஜுல் கவீம், Bபாபுத் தஹாரா, ஃபஸ்ல் பில் முஸ்தஹாழா, பக்கம்: 67.
துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/176–178.

[54]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், மஅ ஹாஷியாஹ் ஷர்வானி, கிதாBபுத் தஹாரா, Bபாபுல் ஹைழ், 1/654, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.

[55]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/103–105, முலக்கஸன்.

[56]...உம்ததுஸ் ஸாலிக் வஉத்ததுந் நாஸிக், கிதாBபுத் தஹாரா, Bபாப் அஸ்பாபுல் ஹதஸ், பக்கம்: 18, அஷ்ஷுஃனுத் தீனிய்யாஹ், கத்தார்.
துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாப் அஸ்பாபுல் ஹதஸ், 1/76, முலக்கஸன்.



www.dawateislami.net

[57]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/82–85. முலக்கஸன். இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/113–115, முலக்கஸன்.

[58]...அல் மஜ்மூஃ ஷரஹுல் முஹZத்தப், கிதாBபுத் தஹாரா, Bபாபு மாயூஜபுல் குஸ்ல், 3/126.

[59]...இப்னு மாஜா, கிதாBபுத் தஹாரா, Bபாபு... அல்கஸ்து ஃபில் வுழு... பக்கம்: 79, ஹதீஸ்: 425, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ்.

[60]...ஃபதாவா ரZஸவிய்யா, 1/984, பாகம் ب.

[61]...இப்னு மாஜா, கிதாBபுத் தஹாரா வ சுனனிஹா, Bபாபு மாஜாஅ ஃபில்கஸ்தி ஃபில் வுழு... பக்கம்: 79, ஹதீஸ்: 424.

[62]...கன்Zஸுல் உம்மால், கிதாBபுத் தஹாரா, Bபாபுஸ் ஸானீ, பாகம்: 9, 9/144, ஹதீஸ்:26255.

[63]...அபூ தாவூத், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் இஸ்ராஃபி ஃபில் மாஇ, பக்கம்: 30, ஹதீஸ்: 96, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.

[64]...மிராதுல் மனாஜீஹ், 1/293, நஈமி குதுப் கானாஹ், குஜராத்.

[65]...நஸாஈ, கிதாBபுத் தஹாரா, Bபாபுல் இஃதிதாஇ ஃபில் வுழு, பக்கம்: 31, ஹதீஸ்: 140, தாருல் குதுBபுல் இல்மிய்யாஹ், Bபேரூத்.

[66]...ஃபதாவா ரZஸவிய்யா, 1/1035, பாகம் ب.

[67]...ஃபதாவா ரZஸவிய்யா, 1/1035, பாகம் ب.

[68]...ஃபதாவா ரZஸவிய்யா, 1/1041, பாகம் ب.

[69]...ஃபதாவா ரZஸவிய்யா, 1/1042, பாகம் ب.

[70]...ஃபதாவா ரZஸவிய்யா, 1/1042, பாகம் ب.

[71]...அல் மன்ஹஜுல் கவீம், Bபாபுத் தஹாரா, ஃபஸ்ல் ஃபில் வுழு, பக்கம்: 26.

[72]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/57, பதங்ய்யுர் கலீல்.

[73]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/57, பதங்ய்யுர் கலீல்.

[74]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, ஃபஸ்ல் ஃபீ ஷுரூதிஸ் ஸலா, 1/49.

[75]...அல் மன்ஹஜுல் கவீம், கிதாBபுத் தஹாரா, ஃபஸ்ல் ஃபில் வுழு, பக்கம்: 25.

[76]...அஸ்னல் மதாலிப், கிதாBபுத் தஹாரா, 1/12.

[77]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/103.

[78]...அஸ்னல் மதாலிப், கிதாBபுத் தஹாரா, Bபாபு ஸிஃபதில் வுழு, 1/96.

[79]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/110.

[80]...இஆனதுத் தாலிபீன், Bபாபுஸ் ஸலா, 1/69–70, முல்தகதன்.

[81]...துஹ்ஃபதுல் முஹ்தாஜ், கிதாBபுத் தஹாரா, Bபாபுல் வுழு, 1/105–106, முல்தகதன்.

# பொருளடக்கம்



| தலைப்பு | பக்கம் |
|---|---|
| முதலில் இதை வாசித்துக் கொள்ளுங்கள் | 1 |
| வுழு செய்யும் முறை (ஷாஃபிஈ) | 2 |
| ஸலவாத்தின் சிறப்புகள் | ,, |
| உஸ்மான் ஙனி அவர்களின் இஷ்கெ ரஸூல் | ,, |
| பாவங்கள் உதிர்ந்துவிட்ட சம்பவம் | 3 |
| உடல் முழுவதும் தூய்மை ஆகிவிட்டது! | 4 |
| வுழுவோடு உறங்குவதின் சிறப்பு | ,, |
| வுழுவோடு மரணித்தவர் உயிர்த்தியாகி ஆவார் | ,, |
| இடையூறுகளிலிருந்து பாதுகாப்பு பெறும் முறை | 5 |
| எந்நேரமும் வுழுவோடு இருப்பதின் 7 சிறப்புகள் | ,, |
| இரட்டிப்பு நன்மைகள் | ,, |
| குளிர் நாட்களில் வுழு செய்த சம்பவம் | ,, |
| வுழு செய்யும் முறை (ஷாஃபிஈ) | 6 |
| வுழு செய்த பின் மீதமுள்ள தண்ணீரில் எல்லா நோய்களும் குணமாகும் | 9 |
| சுவனத்தின் எட்டு வாயில்களும் திறந்து கொள்ளும் | 10 |
| கண் பார்வை பலவீனம் ஆகாது | ,, |
| வுழு செய்த பிறகு சூரதுல் கத்ர் மூன்று முறை | ,, |





www.dawateislami.net

| | |
|---|---|
| ஓதுவதின் சிறப்புகள் | |
| வுழு செய்த பிறகு ஓத வேண்டிய துஆ | ,, |
| வுழு செய்த பிறகு இதையும் ஓதிக்கொள்ளுங்கள் | ,, |
| வுழுவின் 6 ஃபர்ளுகள் | 11 |
| கழுவுதல் என்பதின் விவரம் | ,, |
| வுழுவின் 44 சுன்னத்துக்கள் | ,, |
| வுழுவில் 10 வெறுக்கத்தக்க விடயங்கள் | 13 |
| வெயிலில் சூடான நீரின் விளக்கம் | 14 |
| பயன்படுத்தப்பட்ட தண்ணீரின் முக்கிய மஸ்அலாக்கள் | ,, |
| மண் கலந்து கலங்கலான தண்ணீரால் வுழு கூடுமா கூடாதா | ,, |
| தஸவ்வுஃப் எனும் சூஃபித்துவத்தின் மகத்தான மதனி குறிப்பு | 15 |
| உடலின் எந்தப் பகுதியிலாவது காயம் இருந்தால் | ,, |
| வுழுவில் மருதாணி போன்றவற்றின் மஸ்அலாக்கள் | 16 |
| உறுப்பின் மீது தண்ணீரையே மாற்றக்கூடிய பொருள் இருந்தால் | ,, |
| மர்மஸ்தானத்தைக் காண்பதால் வுழு முறிந்து விடுமா? | 17 |
| குளிக்கும்போது செய்யும் வுழு போதுமானது | ,, |
| பெண்ணைத் தொடுவதினால் வுழு முறியும் மஸ்அலாக்கள் | ,, |
| வுழுவில் சந்தேகம் உண்டாக்கும் 3 விதிகள் | 18 |




www.dawateislami.net

| | |
|---|---|
| மர்மஸ்தானத்தைக் தொடுவதால் வுழு முறிந்து விடுமா? | ,, |
| தூங்குவதால் வுழு முறியுமா அல்லது முறியாதா என்பதன் விளக்கம் | 19 |
| நபிமார்களின் வுழுவும் பாக்கியம் பொருந்திய உறக்கமும் | ,, |
| மஸ்ஜித்களின் வுழு கூடங்கள் | 20 |
| வீட்டில் வுழு செய்யும் கூடங்களை உருவாக்குங்கள் | ,, |
| வுழு செய்யும் அறையை உருவாக்கும் முறை | ,, |
| “يارسولِ خدا எனும் உருது வார்த்தைகளின் 9 எழுத்துகள் தொடர்பில் வுழு கூடத்தின் 9 மதனி மலர்கள் | 21 |
| வுழு நிலைத்து இருக்காதவர்களுக்கான 9 விதிகள் | 22 |
| ஐந்து வெவ்வேறு விதிகள் | 24 |
| வுழு செய்யாமல் புனித குர்ஆனைத் தொடுவது ஹராம் ஆகும் | ,, |
| வுழு செய்யும்பொழுது தண்ணீரை வீணாக்குவது | 25 |
| (1) பாய்ந்தோடும் அருவியிலும் வீண்விரயம் | ,, |
| அஃலா ஹழ்ரத் அவர்களின் ஃபத்வா | ,, |
| (2) வீண் விரயம் செய்யாதீர் | 26 |
| (3) வீண் விரயம் ஷைத்தானின் காரியமாகும் | ,, |
| (4) சுவனத்தின் வெள்ளை அரண்மனையை கேட்கலாமா? | ,, |

| | |
|---|---|
| கெடுதியை செய்தார், அநீதியை செய்தார் | ,, |
| நடைமுறைப்படுத்தி கற்றுக் கொள்ளுங்கள் | 27 |
| மஸ்ஜித் மற்றும் மத்ரஸா தண்ணீரின் வீண் விரயம் | ,, |
| வீண் விரயத்தை தவிர்க்க 4 வழிமுறைகள் | 28 |
| “”یارب اسراف سے بچا” – “வீண் விரயத்திலிருந்து காப்பாற்று ரப்பே” எனும் இந்த உர்து வார்த்தைகளின் பதினான்கு எழுத்துகள் தொடர்பில் வீண் விரயத்தை தவிர்க்கும் 14 மதனி மலர்கள் | 29 |
| 12 மதனி மலர்களின் பூச்செண்டு | 31 |
| வுழுவோடு மரணிப்பவர் உயிர் தியாகி ஆவார் | 33 |
| இந்த இதழை வாசித்த பின் மற்றொருவருக்கு கொடுங்கள் | ,, |
| பிரசவத்தை எளிதாக்கும் செய்முறை (மர்யம் பீபியின் மலர்) | ,, |
| அறுவை சிகிச்சை இல்லாமல் பிரசவம் ஆகும் (மர்யம் பீபியின் மலரின் நன்மை) | 34 |
| ஆதாரங்கள் | 36 |





www.dawateislami.net

# وُضُوخانۂ عطّار (دامت برکاتہم العالیہ)

## اوپر سے وُضُوخانے کا نقشہ




## سیدھی طرف سے وُضُوخانے کا نقشہ





Aalami Madani Markaz, Faizan-e-Madinah, Mahallah Saudagaran
Purani Sabzi Mandi, Bab-ul-Madinah, Karachi, Pakistan
UAN: +92 21 111 25 26 92 | Ext: 7213
Web: www.maktabatulmadinah.com | E-mail: feedback@maktabatulmadinah.com